விலை ரூபா 40
பக்கங்கள் - 12
07.01.2025 - செவ்வாய்க்கிழமை
# ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 64 குரோதி வருடம் மார்கழி மாதம்
23 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 07




# சட்டத்தை நிலை நாட்டுவதில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சி

## சட்ட மாஅதிபரிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு

### 100 நாட்கள் கடந்தும் வழக்கு விசாரணைகள் மந்த கதி

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் சட்ட மாஅதிபர் உள்ளிட்ட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (06) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயற்படும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன்

02



## மற்றுமொரு பரீட்சை வினாத்தாள் கசிந்தது

(ஆர்.மனோசங்கர்)

வட மத்திய மாகாணத்தில் தரம் 11 தவணைப் பரீட்சைக்கான சிங்கள இலக்கிய வினாத்தாள், சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று (06) நடைபெறவிருந்த இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டதாக வடமத்திய மாகாண கல்வி மற்றும் முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

02

## வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தயங்குவது ஏன்...?

(முகம்மட் முக்தார்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அமால் எதிரிசூரிய தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண தேசிய பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்களான தரம் 1-5 வரையான வகுப்புக்கள் இல்லாமலாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வகுப்புக்கள் இல்லாமலாக்கப்பட்டமை காரணமாக அவ்வகுப்புக்களில்

02





நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மதத் தலைவர்கள், கையெழுத்திட்டனர்.
(படங்கள் பு.கஜிந்தன்)

## அரசியல் தவறுகளை மூடி மறைக்கவே மாஃபியா பட்டம்!

### அரிசி ஆலை உரிமையாளர் டட்லி சிறிசேன

(கனுஷியா புஷ்பகுமார்)



திறமையற்ற அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் தவறான செயற்பாடுகளை மூடி மறைக்க தன்னைப் போன்று சுய முயற்சியில் முன்னேறியவர்கள் மீது பல கதைகள் கட்டப்பட்டுள்ளதாக அரலிய அரிசி ஆலையின் உரிமையாளர் டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனது சமூக ஊடகத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

02

## சிவப்பு பச்சைக்கு தட்டுப்பாடு; இந்திய அரிசிக்கு மக்கள் தயக்கம்



(கனுஷியா புஷ்பகுமார்)

நாடளாவிய ரீதியில் தற்போது சிவப்பு பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சிவப்பு பச்சை அரிசியை கொள்வனவு செய்வதில் மக்கள் தயக்கம் காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பல பிரதேசங்களில் அரசாங்க கட்டுப்பாட்டு விலையில் சிவப்பு பச்சை அரிசி விற்பனை நேற்று (06) இடம்பெற்றது. அதன்படி, ஒரு கிலோ 220 ரூபாய் என்ற அடிப்படையில் 5 கிலோ அரிசியை நபர் ஒருவருக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன

02

## அமெரிக்க கடற் பகுதியில் எண்ணெய் அகழ்வுக்கு தடை

### அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிப்பு



அமெரிக்காவின் பெரும்பாலான கடற்கரையோரங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வுக்கு தடை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திங்களன்று (06) அறிவித்துள்ளார்.

பைடன் அறிவித்த தடையானது முழு அட்லாண்டிக் கடற்கரை மற்றும் மெக்ஸிகோவின் கிழக்கு வளைகுடாவையும், அதே போல் கலிபோர்னியா, ஓரிகான் மற்றும் வொஷிங்டன் மற்றும் அலஸ்காவில் உள்ள பெரிங் கடலின் ஒரு பகுதியையும் பசுபிக் கடற்கரையையும் உள்ளடக்கியது.

டெனால்ட் ட்ரம்ப், தனது தேர்தல் பிரசாரத்தின் போது, எரிவாயு செலவைக்

02

## நாடாளுமன்ற முதல் நாள் அமர்வின் தேநீர் விருந்துக்கான செலவு எவ்வளவு....?

"நாடாளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்தின் உண்மையான செலவு" என்ற தலைப்பில் கடந்த டிசம்பர் 29ஆம் திகதி சிங்கள பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் நாடாளுமன்றம் விளக்கமளித்துள்ளது

நாடாளுமன்ற செலவுத் தலைப்பின் கீழ் சம்பிரதாயமாக நடத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் தேநீர் விருந்துபசாரத்திற்காக ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வில்



287,340 ரூபாயும், பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசராத்திற்கு

02

## கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்: நிபந்தனையுடன் ஆதரவளிக்க எதிர்க்கட்சி முடிவு

(ஆர்.மனோசங்கர்)

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (SJB) ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் 'கிளீன் ஸ்ரீலங்கா' முயற்சிக்கு நிபந்தனையுடன் ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளது.

இந்த முயற்சிகள் நல்லது என்றும் இலங்கைக்குத் தேவையானது என்றும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

02

## எலிக் காய்ச்சல் நோயால் கிளிநொச்சியில் இருவர் பலி




கிளிநொச்சியில் எலிக் காய்ச்சல் நோய்க் காரணியான (Leptospirosis) பக்றீரியா தொற்றிய இருவர் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

02

## சீனாவில் பரவும் வைரஸ் ஒரு தொற்று நோயா..? பேராசிரியர் சந்திம ஜீவந்தர விளக்கம்

"சீனாவில் பரவி வரும் எச்.எம்.பி.வி. எனப்படும் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் ஒரு தொற்று நோய் அல்ல. அதேவேளை, புதிய வைரஸும் அல்ல. 2001ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் குளிர்காலத்தில் சுவாச நோய்களை ஏற்படுத்துவதாகும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ்

02

## அச்சு ஊடக விருது வழங்கும் விழா

### 5 மூத்த ஊடகர்களுக்கு இன்று சாதனையாளர் விருது



ஊடகவியல் விருதுகள் வழங்கும் இரவு நிகழ்வின் மைல் கல்லாகவுள்ள வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை இந்த வருடம் 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பெறுகின்றனர்.

நாட்டின் அச்சு ஊடகத்துறையில் மிகச் சிறந்ததைக் கொண்டாடும் மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் வழங்கும் 25 ஆவது நிகழ்வானது இன்று செவ்வாய்க்கிழமை கல்கிசை, மவுண்ட் லவனியா ஹோட்டலின் எம்பயர் பால்றூம் மண்டபத்தில் இடம்பெறுகிறது.

திறமையான, அர்ப்பணிப்புள்ள, விளைவை ஏற்படுத்திய ஊடகவியலாளர்களை கௌரவப்படுத்தும் கால் நூற்றாண்டு மைல் கல்லை இந்த வருடம் குறிப்பதாக உள்ளது.

விருதுகள் 18 பிரிவுகளில் வழங்கப்படுவதுடன் 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் வாழ்நாள் சாதனை யாளர் விருதைப் பெறவுள்ளனர்.

விபரம் 4ஆம் பக்கம்

# பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க விசேட இராஜதந்திரக் குழு




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், விசேட இராஜதந்திரக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், 58ஆவது அமர்வுக்கு முன்னர் சிறப்பறிக்கையை வெளியிடவும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தத் தீர்மானத்தின் 51/1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிடுகையில்,

“இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

எனினும், உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. ஆனால், ஐ.நா. தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

எவ்வாறாயினும் பொறுப்புக்கூறும் விடயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய நேர்மையான அறிக்கையைக் கூடிய விரைவில் அரசு முன்வைக்கவுள்ளது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்குப் பதிலளிப்பதாக அல்லாது எமது அரசின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதாகவே இருக்கும்.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசின் வெளிப்படைத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையிலேயே எமது சிறப்பு அறிக்கை அமையும். இதற்காக இலங்கையின் விசேட இராஜதந்திரக் குழு செயற்படும்.” என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## சட்டத்தை நிலை...

முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார். நீதித்துறை கட்டமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும் எனவும், அரசியல் அதிகாரத்தின் மீதான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும், மக்களின் எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைய ஒருபோதும் இடமளிக்கக் கூடாது எனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இங்கு மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும், சட்டத்தை நிலைநாட்டுவது தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதோடு அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அரசுக்கு ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தம் இலங்கையின் ஜனாதிபதியாக அனுரகுமார திஸநாயக்க தெரிவாகி 100 நாட்களுக்கு மேலாகும் நிலையில் பல முக்கியமான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

“கொள்ளையர்களை விரைவாக பிடிக்க வேண்டும்“ என்ற அழுத்தம் ஜனாதிபதியின் மீது அதிகரித்து வருவதாகவும், தாமதங்களுக்கு அதிகாரிகளை குறை கூறும் போக்கை காணக்கூடியதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் குற்றவியல் வழக்குகளில் முழுமையாக விசாரணைகளை நிறைவு செய்யாமல், பொலிஸாரால் விசாரணையில் சில பகுதிகளின் அறிக்கைகளை மாத்திரம் அனுப்பப்படும் போது, அப்படியான வழக்குகள் அல்லது குற்றச்சாட்டுக்களை மீண்டும் விசாரிக்கப்போவதில்லை என சட்ட மா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

உயர்மட்டத்தில் எழும் குற்றசாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளின் போது, போதிய அரச சட்டத்தரணிகள் இல்லாத காரணத்தால் தாங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை அடுத்து, சட்ட மா அதிபர் திணைக்களம் அப்படியான வழக்குகளின் விசாரணையை முன்னெடுப்பதில்லை என்ற தீர்மானத்திற்கு வந்துள்ளது. அதிலும் முக்கியமாக தீவிரமான பல வழக்குகளில் பொலிஸ் விசாரணைகள் முழுமையாக நிறைவடையாத காரணங்களினால், தம்மால் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் வழக்குகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என அந்த திணைக்களம் தெரிவிக்கின்றது.

ஊழலுக்கு எதிரான சர்வதேச தினத்தையொட்டி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, நீதிமன்றங்களில் வழக்குகளை பதிவு செய்வதில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் தாமதங்கள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

“ஆவணக் கோப்புக்களை சட்ட மா அதிபர் திணைக்களம் ஏழு ஆண்டுகள் வரையில் பூட்டி வைத்திருக்கும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. சில வழக்குகளில் அவை பதிவு செய்யப்பட்ட நாளுக்கு பின்னர் “தூசு தட்டாமல்“ அப்படியே வைத்திருந்து காலம்கடந்து நீர்த்துப்போகச் செய்யப்படுகின்றன”, என ஜனாதிபதி அப்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

வழக்கு விசாரணைகள் தாமதமாவதில் பொலிஸாரின் வகிபாகம் குறித்து தொடர்ச்சியாக பல ஆண்டுகளாகவே கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏழு வழக்குகளின் விசாரணைகளை விரைவில் நிறைவுக்கு கொண்டுவருமாறு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அப்போதைய பதில் பொலிஸ் மாஅதிபாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதில் பிணைமுறி பத்திர ஊழல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஆகியவையும் உள்ளடங்கும்.

## மற்றுமொரு பரீட்சை...

அதன்படி நேற்று காலை 8.00 மணியளவில் 08 கல்வி வலயங்களில் உள்ள 30 பிரிவுகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் உரிய வினாத்தாள் விநியோகம் நிறுத்தப்பட்டது. அதேநேரம், பரீட்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு அதற்கு மாற்றீடாக மற்றுமொரு வினாத்தாள் வழங்கப்படும் என சிறிமேவன் தர்மசேன மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் தலைமையக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த முறைகேடு எவ்வாறு இடம்பெற்றது என்பதை கண்டறிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக கடந்த ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் மூன்று வினாக்கள் கசிந்திருந்தன.இந்த விவகாரம் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு...

ஆரம்பக்கல்வியை கற்பித்த சுமார் 200 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பிப்பதற்குரிய பாடங்கள் இன்றி கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறான ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி பாட வெற்றிடங்களுக்கு இடமாறறம் செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்து அதுபற்றி வடக்கு, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுக்களுக்கு அறிவித்த போதும் அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு மாகாண கல்வி அமைச்சுக்கள் தயாராக இல்லையென கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண அதிகாரிகளின் இந்நடவடிக்கை காரணமாக எதிர்காலத்தில் கல்விக்கல்லூரிகள் மூலம் டிப்ளோமா பட்டம் பெறும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை அம்மாகாணங்களில் நியமிக்க முடியாத நிலை ஏற்படுமென மேலதிக செயலாளர் அமால் எதிரிசூரிய மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமை நாட்டிலுள்ள ஏனைய மாகாண சபைகளில் இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அரசியல் தவறுகளை

மேலும் குறித்த பதிவில், “திறமையற்ற அரசியல்வாதிகளின் மற்றும் அரச அதிகாரிகளின் தவறுகளை மறைக்க எங்களைப் போன்று சுய முயற்சியில் முன்னேறியவர்கள் மீது பல கதைகள் புனையப்பட்டுள்ளன.

உலகிலேயே பெரிய அரிசி சேமித்து வைக்கும் வசதி கொண்ட அரிசி ஆலையை நாட்டிற்கு கொடுத்துள்ள எம் மீது, “அரிசி மாஃபியா“ என்ற முத்திரையை ஒட்டியுள்ளார்கள்.

ஆனால், இன்று போல் நாளையும் நாட்டிற்காக உழைப்பேன். நாட்டுக்காக முதலீடு செய்வேன். ஏனெனில், நானும் எனது மகன் திமித்ர உள்ளடங்கிய குழுவினருக்கும் இந்த நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உண்மையான ஆசை இன்னும் இருக்கிறது.” என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## சிவப்பு பச்சைக்கு

இந்த அரிசியை வாங்குவதற்கு மக்கள் அதிகாலையில் இருந்து வரிசையில் காத்திருந்த நிலையில் குறைந்த அளவு அரிசிக் கையிருப்பு காரணமாக பலர் வெறுங்கையுடன் திரும்பினர்.

சிவப்பு பச்சை அரிசிக்கு அதிக கேள்வி இருக்கும் தென் மாகாணத்தில் குறித்த அரிசிக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.மேலும் சில கடைகளில் கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அரிசி விற்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

## அமெரிக்க கடற் பகுதியில்...

குறைக்கும் முயற்சியில் உள்நாட்டு புதைபடிவ எரிபொருள் உற்பத்தியை ”கட்டவிழ்த்து விடுவதாக” உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்பதற்கு இன்னும் சில நாட்கள் உள்ள நிலையில் இந்த பைடனின் மேற்கண்ட புதிய நிர்வாக உத்தரவு வந்துள்ளது.எனினும் புதிய தடை எப்போது அமுல்படுத்தப்படும் என்ற திகதி குறிப்பிடப்படவில்லை.

ட்ரம்ப் இந்த மாத இறுதியில் பதவியேற்கும் போது பைடனின் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றக் கொள்கைகளை மாற்றியமைப்பதாக உறுதியளித்துள்ளார். பைடன் 1953 ஆம் ஆண்டின் வெளிப்புற கான்டினென்டல் ஷெல்ஃப் நிலங்கள் சட்டத்தின் (Outer Continental Shelf Lands Act) கீழ் நடவடிக்கை எடுத்து வருகிறார்.இது ஜனாதிபதிகள் கனிம குத்தகை மற்றும் துளையிடுதலில் இருந்து பகுதிகளை திரும்பப் பெற அனுமதிக்கிறது.எவ்வாறெனினும் 2019 நீதிமன்ற தீர்ப்பின்படி, முந்தைய தடைகளை இரத்து செய்வதற்கான சட்டப்பூர்வ அதிகாரத்தை சட்டம் அவர்களுக்கு வழங்கவில்லை.

2032 ஆம் ஆண்டு வரை புளோரிடா கடற்கரையில் கிழக்கு மெக்ஸிகோ வளைகுடாவில் கடல் துளையிடல் உரிமைகளை விற்பனை செய்வதைத் தடை செய்ய ட்ரம்ப் இந்த சட்டத்தைப் பயன்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்:...

இதன்படி, நடைபாதை வியாபாரிகள் அகற்றப்படாவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தி இந்த முயற்சியை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக அவர் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

சட்டவிரோத வியாபாரிகள் அகற்றப்பட வேண்டும் என்றும், வாகனங்களில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட பாகங்களும் அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அங்கீகரிக்கப்படாத பாகங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள், குறிப்பாக பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க பொலிஸார் ஏற்கனவே ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சமீபத்தில் ஜனாதிபதி செயலகத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ முயற்சியைத் தொடங்கினார்.

முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோர் இந்த முயற்சிக்கு ஏற்கனவே ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந்த “சரியான” முயற்சியில் பங்கேற்க ஜனாதிபதி தம்மை அழைத்ததாக சங்கக்கார தெரிவித்திருந்தார். இந்த திட்டம் விரிவானது என்றும் அரசாங்கத்தால் மட்டும் செயல்படுத்த முடியாது என்றும் அவர் கூறியிருந்தார்.

இது இலங்கைக்கு ஒரு நல்ல தொடக்கம் என்றும், பொதுமக்களின் ஆதரவு இதற்குத் தேவை என்றும் மஹேல ஜயவர்தன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் பரவும் வைரஸ் ஒரு

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

”குளிர்காலத்தில் இவ்வாறான சுவாச நோய்கள் ஏற்படுவது வழமையானதாகும். ஆனால், இது பொது சுகாதார அவசர நிலைமைக்குக் காரணமாக அமையாது. அந்தவகையில் தற்போது சீனாவில் சுவாச நோய்த்தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

இதன் அறிகுறிகளில் இருமல், சளி அல்லது மூக்கில் அடைப்பு, காய்ச்சல் மற்றும் தொண்டை புண் ஆகியவை அடங்கும்.

கடுமையான சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல் அல்லது மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நிமோனியாவாக அதிகரிக்கும்.

2001 இல் கண்டுபிடிக்கப்பட்ட இது ஒரு புதிய வைரஸ் அல்ல. இது பொதுவாக சளி அல்லது காய்ச்சலைப் போன்ற அறிகுறிகளுடன் சுவாச நோய்த் தொற்றுகளை ஏற்படுத்துகின்றது.

சில சமூக ஊடகப் பதிவுகள் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. ஆனால், சீனா அல்லது உலக சுகாதார ஸ்தாபனம் பொது சுகாதார அவசரகால நிலையை அறிவிக்கவில்லை.” – என்றுள்ளது.

## எலிக் காய்ச்சல்...

கிளிநொச்சியின் முழங்காவில் மற்றும் கண்டாவளைப்பகுதிகளில் எலிக் காய்ச்சல் நோய்க் காரணியான பக்றிரீயா தொற்றிய இருவர் உயிரிழந்துள்ளனர்.

காய்ச்சல் ஏற்பட்டாலோ அல்லது தசைநோ, கண் சிவத்தல், சுவாசப் பிரச்சினைகள் போன்றவை காணப்பட்டாலோ, உடனடியாக வைத்திய பரிசோதனை செய்து கொள்ளுமாறு, பொதுமக்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இதைவிட, தற்போதைய பனியுடனான காலநிலையில் சளி அதிகரித்து நிமோனியா போன்ற காய்ச்சலும் ஏற்பட வாய்ப்புண்டு. அதனைவிட மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளது. இவை குறித்தும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற....

339,628.55 ரூபாயும் செலவு செய்யப்பட்டிருப்பதாக அந்த ஊடக செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2020.08.20 ஆம் திகதியும், பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2024.11.21 ஆம் திகதியும் நடைபெற்றன.

இதற்கு அமைய ஒன்பதாவது நாடாளுமன்றம் மற்றும் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதல்நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரங்களுக்கான செலவுகள் சில காரணங்களினால் வேறுபடுவதாக நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது

ஒன்பதாவது மற்றும் பத்தாவது நாடாளுமன்றங்களின் முதல்நாள் அமர்வுகளுக்கிடையில் 4 வருட கால இடைவெளி காணப்படுவதாகவும் இக்கால இடைவெளியில் சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கங்கள் விருந்துபசாரத்துக்கான செலவுகள் உள்ளிட்ட ஏனைய செலவினங்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தது என நாடாளுமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவினால் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்தமையால் உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கான செலவுகள் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் அண்ணளவாக 100% இனால் அதிகரித்துள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புவதாகவும் நாடாளுமன்றம் கூறுகிறது

மேலும், இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி, இராஜதந்திரிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதாகவும் நாடாளுமன்றம் குறிப்பிட்டுள்ளது

# ஒய்வூதியர்களுக்கு பெருவிரலடையாளம் மட்டும் உயிர்வாழ் சான்றாக ஏற்பு

(முகம்மட் முக்தார்)

2016 ம் ஆண்டிற்கு பின்னர் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் உயிர்வாழ் சான்றை பெருவிரலடையாளம் மூலம் மட்டும் உறுதிப்படுத்த வேண்டுமென திருத்தப்பட்ட ஓய்வூதிய சுற்றறிக்கை மூலம் ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். இத்திருத்தத்திற்கமைய 2016 ம் ஆண்டிற்கு பின்னர் ஓய்வு பெற்றவர்கள் தாம் ஓய்வூதியம் பெறும் வங்கிக்கிளையில் அல்லது பெருவிரலடையாள வசதி உள்ள தமக்கு வசதியானதொரு வங்கிக்கிளையில் தமது பெருவிரலடையாளத்தை வழங்கி தமது உயிர்வாழ்வை உறுதிப்படுத்துமாறு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார். 2016 ம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றோர் வழமைபோல் தமது பகுதி கிராம சேவை உத்தியோகத்தரை

## ஒய்வூதிய திணைக்களம் அறிவிப்பு!!

சந்தித்து ஓய்வூதிய திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் ஒப்பமிடலாம்.

வெளிநாடுகளில் வாழும் ஓய்வூதியர்கள் ஓய்வூதிய திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ள ஓய்வூதிய உயிர்வாழ் சான்றிதழை தரவிறக்கம் செய்து பூர்த்தி செய்து தாம் வாழும் நாடுகளில் உள்ள இலங்கைத் தூதவராலயத்தில் ஒப்படைக்க வேண்டும்.

பெப்ரவரி 15 ம் திகதிக்கு முன்னர் இந்நடைமுறைகளை பின்பற்றாத ஓய்வூதியர்களின் மார்ச் மாத ஓய்வூதியம் நிறுத்தப்படுமெனவும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

# அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர், உறுப்பினர்கள் நியமனம்





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நிமல் ஆர். ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார். அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆர். எம். டபிள்யூ. ராஜபக்ச, பேராசிரியர் ஜோசப் யோகராஜா (Stanislaus Joseph Yogarajah) மற்றும் லரீனா அப்துல் ஹக் (Lareena Abdul Haq) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று (06) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டன.

# சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சியைப் பார்வையிட்டார் சஜித்



கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் நடைபெற்று வரும் FACEST Sri Lanka 2025 சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஞாயிற்றுக்கிழமை (05) பார்வையிட்டார். இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கூடங்களைப் பார்வையிட்ட அவர், தேசிய மற்றும் வெளிநாட்டுக் கலைஞர்களின் பல்வேறு வகையிலான வடிவமைப்புகளையும் பார்வையிட்டார்.

# பயணிகளின் உரிமைகள் தொடர்பான பட்டியலை தயாரிக்க நடவடிக்கை

பஸ் பயணிகளின் உரிமைகள் தொடர்பான பட்டியலைத் தயாரிப்பதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி பஸ் மற்றும் பயணிகள் சங்கங்களுடன் கலந்துரையாடி அது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி திலிப விதாரண தெரிவித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பஸ்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் மாகாண சபைகளினால் வழங்கப்படும் பஸ் அனுமதிப்பத்திரங்களில் உள்ள நிபந்தனைகளைப் பயன்படுத்தி இந்த பயணிகள் உரிமைப் பட்டியலைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருவதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி திலிப விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு குறுகிய நேரம் விஜயம் செய்த சீன வெளிவிவகார அமைச்சர்

(ஆர்.மனோசங்கர்)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு அரசியல் பணியக உறுப்பினரும் சீன வெளியுறவு அமைச்சருமான வாங் யி, கடந்த ஞாயிற்றுக்கிழமை நமீபியாவுக்குச் செல்லும் வழியில் இலங்கையில் சிறிது நேரம் தங்கியிருந்துச் சென்றுள்ளார்.

இதன்படி, சீன உயர்மட்ட குழுவினர் இலங்கை நேரப்படி பி.ப 2.18 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக



இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தெரிவித்துள்ளது. 18 உறுப்பினர்களைக் கொண்ட சீனக் குழுவை இலங்கைக்கான சீனத் தூதர் குய் ஜென்ஹாங், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தலைவர் ஹர்ஷ அபேவிக்ரம உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

சீன வெளியுறவு அமைச்சரும் அவரது குழுவும் இலங்கை நேரப்படி பி.ப 04.23 மணிக்கு இலங்கையிலிருந்து புறப்பட்டனர். ஜனவரி 5 முதல் 11 வரை நமீபியா, கொங்கோ குடியரசு, சாட் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு வாங் யி விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மீண்டும் சோதனைச் சாவடி

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இருந்து அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் திடீரென அமைக்கப்பட்டு வருகின்றன.

போரின் போதும் போர் முடிவுற்ற பின்னரும் கூட பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்திருந்தனர். இந்நிலையில் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பின்னர் இங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன. எனினும், அந்தச் சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில்



அமைக்கப்பட்டு வருகின்றன.மாற்றம் என்று கூறி புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு சோதனைச் சாவடிகளைத் தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைப்பதுமான இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அரசின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீண்ட காலமாகப் பருத்தித்துறையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமை அகற்றுவதாக அநுர அரசு உறுதியளித்திருந்த போதிலும் இதுவரையில் அது அகற்றப்படாமலே இருக்கின்றது.

# மாணவியை காணவில்லை

16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் காணாமல் போயுள்ளதாக பதுளை எட்டம்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 3ஆம் திகதி முதல் குறித்த மாணவி காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறுமியின் தாயார் இது தொடர்பான முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளதுடன், காணாமல் போன மாணவி சுமார் 5 அடி 2 அங்குல உயரமும் சாதாரண உடலமைப்பும் கொண்டவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இறுதியாக வெளிர் பச்சை நிற, நீளமான சட்டை அணிந்திருந்ததாகவும், அவரது இடது கையின் முழங்கைக்கு அருகில் சிறிய வெட்டு காயம் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போன மாணவி தொடர்பில் தகவல் தெரிந்தால், பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

பொறுப்பதிகாரி - எட்டம்பிட்டிய 0718591528

எட்டம்பிட்டிய பொலிஸ் நிலையம் - 0552295466

# முஸ்லிம் பெண்கள் ஆளுமைகளின் நான்காவது தேசிய மாநாடு

(எம்.பஹத் ஜுனைட்)

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு நடாத்தும் முஸ்லிம் பெண்கள் ஆளுமைகளின் நான்காவது தேசிய மாநாடானது, "குடும்ப கட்டமைப்பை பேணுபவளே ஆற்றலுள்ள ஆளுமைப் பெண்" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் திருகோணமலை ஜுபிலி மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை (05) நடைபெற்றது. இலக்கிய வித்தகரும் அமைப்பின் தலைவியுமான சம்மாந்துறை மஷ்றா தலைமையில்




ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரான எம்.எம். நஸீர், முதலமைச்சின் செயலாளரான இஸட் ஏ.எம். பைஸால் ஆகியோர் கலந்துகொண்டனர். விஷேட அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவனீதன், சிறப்பு அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைச் சேர்ந்த அஸ்ப், பொறியியலாளர் ஆசிரியரான கதிர் திருச் செல்வம், கௌரவ அதிதிகளான அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரான ஏ.எல். தௌபீக், திருகோணமலை ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் முஹைஸ் மற்றும் திருகோணமலை குரு முதல்வர், பணிப்பாளரான அருட்தந்தை டொக்டர் போல் றெபின்ஸன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 23ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும்.

**ரிஷபம்** இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும்.

**மிதுனம்** இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள்.

**கடகம்** இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது.

**சிம்மம்** இன்று நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

**கன்னி** இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

**துலாம்** இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** இன்று உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும்.

**தனுசு** இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள்.

**மகரம்** இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள்.

**கும்பம்** இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை.

**மீனம்** சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 04:36 வரை அஷ்டமி பின்பு நவமி.

**நட்சத்திரம்:** இன்று மாலை 06:15 வரை ரேவதி பின்பு அஸ்வினி.

**யோகம்:** சித்த.

**சந்திராஷ்டமம்:** பூரம், உத்திரம்.

**சூலம்:** வடக்கு.

**இராகு காலம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

**குளிகை:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

**எமகண்டம்:** 09:00 AM முதல் 10:30 AM வரை.

# கங்கை அமரன் மருத்துவமனையில் அனுமதி



தமிழ் திரைத் துறையில் இசையமைப்பாளராக அறிமுகமான கங்கை அமரன் (77), மானாமதுரையில் நடந்த படப்பிடிப்பில் பங்கேற்ற கங்கை அமரனுக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

உடனே அவருக்கு சிவகங்கை அரசாங்க மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பின், மேலதிக சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவர், கோழிக் கூவுது படத்தின் மூலம் 1982ஆம் ஆண்டில் இயக்குநராக அறிமுகமானார். பல படங்களுக்கு பாடல்களை எழுதியுள்ள கங்கை அமரன், பிரபல பாடல்களையும் பாடியுள்ளார்.

தற்போது கங்கை அமரன் புதிய படத்தில் நடித்து வருகிறார். சிவகங்கை சுற்றுவட்டாரப் பகுதிகளில் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது.

# சிரேஷ்ட ஊடகர் ஹம்ஸா ஹனிபா காலமானார்

அல் இஸ்லாம் அறக்கட்டளையின் தலைவரும், அல் இஸ்லாம் பத்திரிகையின் தலைமை ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம். ஹம்ஸா ஹனிபா காலமானார். இவர் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் டெய்லி நியூஸ் மற்றும் சன்டேஒப்சேவர் ஆகிய பத்திரிகைகளில் கடமையாற்றியுள்ளார். அன்னாரது ஜனாஸா 26 ஏ, எடிவீர அவென்யூ, தெஹிவளை என்ற இல்லத்தில் இருந்து இன்று, 7ஆம் திகதி தெஹிவளை பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் காலை 7:30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## பயணிகளை பணயம் வைக்கும் தனியார் பஸ் உரிமையாளர்கள்

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்று நூறு நாட்கள் கடந்துள்ளன.

இந்நிலையில், புதுவருட தினத்தன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் "க்ளீன் ஸ்ரீலங்கா திட்டம்" அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நாடு முழுவதும் சுத்தப்படுத்துவது, அதே நேரம், மக்கள் எதிர்ப்பார்த்த ஊழலற்ற அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது என்ற இரண்டு இலக்குகளைக் கொண்டு இத்திட்டம் முன்வைக் கப்பட்டுள்ளது.

ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கான செயற்பாடுகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளில் அரச அதிகாரிகள் முனைப்புடன் செயல்படுகிறார்கள் என்பது ஓரளவு தெளிவாகிறது.

எனினும், கிளீன் ஸ்ரீலங்கா என்று அரசின் இந்த இலக்கு வைத்த செயல்பாடு விமர்சிக்கப்பட்டும் வருகிறது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், இந்தத் திட்டத்தின் செயல்பாடுகளை, கடுமையாகக் கண்டித்துள்ளன. போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தங்களது பஸ்கள் மீது, கிளீன் ஸ்ரீலங்கா என்ற போர்வையில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறுகின்றார்கள். பொலிஸாரின் இந்த செயல்பாடுகள் மூலம், தங்களது தொழிலுக்கு இடைஞ்சல் ஏற்படுவதாகவும், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்தின குற்றம் சாட்டியுள்ளார்.

அரசின் இந்த நடைமுறைகளை கண்டித்து, பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதேநேரம், வேகத்தை கட்டுப்படுத்தல் மற்றும் விபத்துக்களை குறைக்கும் நோக்கில் "க்ளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தின் ஒரு செயற்பாடாக இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தனியார் பஸ்களில் பொலிஸார் மூலம் மேற்கொள்ளப்படும் இந்த சோதனை நடவடிக்கைகளினால் பல சிக்கல்களை சந்திக்க நேரிட்டுள்ளது என்பதே அவர்களின் குற்றச்சாட்டாக காணப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டை முன்வைத்து இவ்வாரத்தில் பணிப்புறக் கணிப்பு ஒன்றை மேற்கொள்ளவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தயாராக இருந்தது. எனினும், இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடும் வரையில் குறித்த பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில், பணிப்புறக்கணிப்பு ஒன்றை மேற்கொள்ளும் அளவிற்கு இந்த சோதனை நடவடிக்கை சிக்கலாக அமைந்துள்ளதா.? என்ற கேள்வி எழுகின்றது.

வீதி விபத்துகள் மூலம், அப்பாவி மக்கள் பலியாகும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதை காண முடிகின்றது.

சாரதிகளின் கவனயீனம், சாரதிகளுக்கு சரியான ஓய்வின்மை, போதைப்பொருள் பயன்பாடு, உதிரிப்பாகங்கள் சீராக இல்லாமை போன்ற காரணங்கள் இந்த சம்பவங்களின் பின்புலத்தில் இருக்கின்றன.

சோதனை நடவடிக்கையால் தொழிலை மேற்கொள்வதில் சிரமம் எனக் குற்றம் சுமத்தும் இவர்கள் மீது காலங்காலமாக பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எரிபொருள் விலை அதிகரிக்கும் போது பஸ் கட்டணத்தில் ஆர்வம் செலுத்தும் இந்த தனியார் பஸ் உரிமையாளர்கள், எரிபொருள் விலை குறைவடையும் போது மாத்திரம் அதில் ஆர்வம் செலுத்துவதில்லை. அதற்கு தீர்வாக பல போலியான காரணங்களை முன்வைத்து மக்களை ஏமாற்றுகின்றனர்.

தனியார் பயணிகள் பஸ்களில் நடக்கின்ற மோசமான நிலை, மக்கள் மத்தியில் பெரும் குமுறலாக இன்னும் தொடர்கிறது. தனியார் பஸ்களில் கட்டணம் பெறும் நடத்துனர்கள், பயணிகளிடம் மிகுதி பணம் கொடுப்பதில், பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அரசு நிர்ணயித்த ஆரம்பக் கட்டணம் 28 ரூபாய். ஒருவர் முப்பது ரூபாய் கொடுத்தால், மிகுதி இரண்டு ரூபாய் அவர்கள் கொடுப்பதே இல்லை. இது தொடர்ந்து கொண்டிருக்கின்ற அவலம். இது தொடர்பில், கெமுனு விஜயரத்தினவிடம் பல தடவை நாம் நேரடியாகவே முறைப்பாடு செய்துள்ளோம். இந்த அவல நிலை தொடர்பாக கவனத்தில் கொள்ளாத கெமுனு, பயணிகளைப் பாதுகாக்கும் அரசின் நடவடிக்கையை எதிர்ப்பதில் நியாயமே இல்லை.

பாரிய பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தல் என்பதாலும், மக்களின் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப்பெற்றதனாலும் அநுரவுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளன.

அதன் முதற்கட்டமாக தான் இந்த "க்ளீன் ஸ்ரீலங்கா" திட்டம் பார்க்கப்படுகிறது. இதன் செயற்பாடுகளில் சில கேள்வியெழுப்பக் கூடியதாக இருந்தாலும், வாகனங்களை சோதனைக்குட்படுத்தும் இத்திட்டம் மக்கள் நலனில் ஆர்வம் செலுத்தும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

இதனை எதிர்ப்பது என்பது அரசாங்கத்தின் செயற்பாடுகளை முடக்க முற்படும் ஒரு திட்டமாக கருதலாம். மக்கள் கோரும் மாற்றம் இதிலிருந்து ஆரம்பிக்க வழிவகுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

பஸ்களின் கண்ணாடிகளில் சாரதியின் ஆசனத்திற்கு அருகில் தொங்கவிடப்பட்டிருக்கும் அலங்காரப் பொருட்கள் அநாவசியமானவை. இதனால் சாரதியின் கவனம் சிதறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதே நேரம் சாரதிக்கு முன்னால், சிறிய தொலைக்காட்சி பெட்டிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் தேவையா...?

வாகனத்தின் உதிரிப்பாகங்கள் தொடர்பில் சரியான தெளிவின்றி அவற்றை பரிசீலிக்காது செலுத்துவதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. ஆக "க்ளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் இந்த செயற்பாடு மக்களுக்கு சிறந்த ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

பொதுமக்களுக்காக வழங்கப்பட்டுள்ள பொதுப் போக்குவரத்து நிச்சயம் பொதுமக்கள் நலனுக்காக மாத்திரமே செயற்பட வேண்டும் என்பதில் எதுவித மாற்றுக் கருத்தும் இல்லை.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதனாலோ அல்லது குறித்த செயற்பாடுகளை மறுப்பதனாலோ மக்களுக்கு எதுவித பலனும் கிடைக்கப்போவதில்லை என்பதை தனியார் பஸ் உரிமையாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். சுயநலனுக்காக மக்கள் நலனை அடமானம் வைப்பது என்பது முட்டாள் தனமானது.

# 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள்

ஊடகவியல் விருதுகள் வழங்கும் இரவு நிகழ்வின் மைல் கல்லாகவுள்ள வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை இந்த வருடம் 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பெறுகின்றனர்.

நாட்டின் அச்சு ஊடகத்துறையில் மிகச் சிறந்ததைக் கொண்டாடும் மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் வழங்கும் 25 ஆவது நிகழ்வானது இன்று செவ்வாய்க்கிழமை கல்கிசை, மவுண்ட் லவனியா ஹோட்டலின் எம்பயர் பால்றூம் மண்டபத்தில் இடம்பெறுகிறது.

திறமையான, அர்ப்பணிப்புள்ள, விளைவை ஏற்படுத்திய ஊடகவியலாளர்களை கௌரவப்படுத்தும் கால் நூற்றாண்டு மைல் கல்லை இந்த வருடம் குறிப்பதாக உள்ளது.







விருதுகள் 18 பிரிவுகளில் வழங்கப்படுவதுடன் 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறவுள்ளனர். இந்த நிகழ்ச்சியானது இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடனும் அதனுடன் இணைந்த இலங்கை பத்திரிகைகள் சபை, இலங்கை சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை தொழில் புரியும் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பங்காளித்துவத்துடன் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை அம்மையப்பபிள்ளை யோகமூர்த்தி, என். எம். அமீன், சந்திரிக்கா விஜேசுந்தர, பென்னட் ரூபசிங்க மற்றும் ஸனிதா கரீம் ஆகியோர் பெறுகின்றனர்.

### அம்மையப்பபிள்ளை யோகமூர்த்தி

1970 களில் கொழும்பிலிருந்து வெளியாகிய பிரபல தமிழ், நகைச்சுவை சஞ்சிகையாகிய "சிரித்திரன்" சஞ்சிகையில் கருத்தோவியங்கள், நகைச்சுவை துணுக்குகள், கட்டுரைகள் மற்றும் கவிதைகளை வெளியிட்டதன் மூலம் இவர் தனது ஊடகப் பணியை ஆரம்பித்திருந்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய "ஈழமுரசு", "சமநிதி" மற்றும் சில பத்திரிகைகளுக்கும் ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்புகளைச் செய்திருந்தார். பின்னர் இவர் 1984 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் விவசாய வர்த்தக நிறுவனம் ஒன்றில் கணக்கு இலிகிதர் பின்னர் முகாமையாளராகப் பணியாற்றினார். 1996 ஆம் ஆண்டில் கொழும்புக்கு இடம்பெயர்ந்த இவர் 1996 ஆம் ஆண்டில் "வீரகேசரி" பத்திரிகைக்கு ஆங்கில, சிங்கள மொழிபெயர்புக் கட்டுரைகளை எழுதி வந்தார். பின்னர் 1997 ஆம் ஆண்டு ஏப்ரலில் "தினக்குரல்" பத்திரிகை ஆரம்பித்த காலத்திலிருந்து அதில் ஆசிரியபீட கருத்தோவியராகவும் மொழிப்பெயர்ப்பாளராகவும் இன்று வரை பணியாற்றி வருகிறார்.

இவர் இதுவரையில் சுமார் 5 ஆயிரம் அரசியல் கேலிச் சித்திரங்கள் மற்றும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்புகளை "தினக்குரல்" பத்திரிகையிலும் "வீரகேசரி" பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளார். 1970 களிலிருந்து இக்கட்டான காலகட்டங்களில் அரசியல் கேலிச் சித்திரங்கள் மற்றும் கட்டுரைகளை வழங்கி அவரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.

இவர் கேலிச் சித்திர படைப்புகளுக்காக 4 விருதுகளையும் 2 கலசப் பதக்கங்களையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நிஸாமுதீன் உடயார் முஹம்மத் அமீன்

தெஹிவளை, நெதிமாலை பிரதேசத்தில் விஜித வீதியில், 41/2 ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் 72 வயதான நிஸாமுதீன் உடயார் முஹம்மத் அமீன் தனது ஆரம்பக் கல்வியை தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலத்தில் பூர்த்தி செய்து பின்னர் ஹெம்மாதகம அல் அஸ்ஹர் மகா வித்தியாலத்திலும் உயர் தரக் கல்வியை மாவனல்லை ஸாஹிரா கல்லூரியிலும் கற்றார்.

இதனையடுத்து 1974 ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் கலை இளமாணிப் பட்டத்தை பெற்ற என்.எம். அமீன் என சுருக்கப் பெயரால் அழைக்கப்படும் அவர் ஊடகத்துறையிலான தனது அபிமானம் காரணமாக 1976 ஆம் ஆண்டு லேக் ஹவுஸ் குழுமத்தில் தினகரன் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் ஒரு பயிற்சி ஊடகவியலாளராக தனது பணியை ஆரம்பித்தார். அங்கு அவரது பணியின் பயணம் 2007 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது.

முதலில் அவர் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையிலும் பின்னர் தினமின சிங்களப் பத்திரிகையிலும் பாராளுமன்ற செய்தி ஆசிரியராக பணியாற்றினார். பின்னர் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனைத்து தமிழ் வெளியீடுகளுக்குமான முகாமைத்துவ ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

2007 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ப்ரீலங்கா செய்திப் பத்திரிகை நிறுவனத்தில் நவமணி பத்திரிகையின் பணிப்பாளராகவும் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். அவர் 1995 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக பொதுச் செயலாளராக பதவிப் பொறுப்பேற்றதுடன் 1998 ஆம் ஆண்டில் அதன் தலைவரானார். தெற்கு ஆசிய சுதந்திர ஊடக சங்கத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளராக சேவை யாற்றிய அவர், 22 வருட காலத்துக்கு மேலாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்பட்டு வருகிறார்.

கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை தென் கிழக்குப் பல்கலைகழகம், இலங்கை இதழியல் கல்லூரி மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் என்பவற்றில் ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான வருகைதரு விரிவுரையாளராகவும் சேவையாற்றியுள்ளார். என்.எம்.அமீன் ஊடகத்துறையில் மட்டுமல்லாது சமூக சேவையிலும் தன்னை இணைத்துக் கொண்ட ஒருவராகத் திகழ்கிறார். அந்த வகையில் அவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவராக சேவையாற்றியுள்ளதோடு இலங்கை முஸ்லிம் கவுன்சிலின் தலைவராக தற்போதும் பணியாற்றி வருகிறார்.

அவர் தனது சேவைக் காலத்தில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, ஈரான், ஜப்பான், குவைத், மாலைதீவு, நேபாளம், ஓமான், பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா, துருக்கி மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஸனிதா கரீம்

ஸனிதா கரீம் 1970 களின் இறுதியிலிருந்து ஊடகவியலில் உள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம் பெற்றதையடுத்து அவர் தனது ஊடகவியல் தொழிலை ஆரம்பித்தார். காலி, திரு இருதய கல்லூரியின் முன்னாள் மாணவியான அவர் சண் பத்திரிகையில் பாராளுமன்ற செய்தியாளராக தனது ஊடகவியல் தொழிலை ஆரம்பித்தார். பின்னர் உபாலி நியூஸ் குழுமத்தில் இணைந்துகொண்ட அவர், ஐலன்ட் பத்திரிகையில் 1981 ஆம் ஆண்டு அது ஆரம்பமானது முதல் பணியாற்றினார். ஊடகத்துறையிலான நீண்ட கால தொழில் அனுபவத்தில் கரீம் பத்திரிகையின் நவநாகரிக மற்றும் சமூகப் பக்கங்களுக்குப் பொறுப்பாகவிருந்து அந்தப் பத்திரிகை புதிய உயரமொன்றை தொட வழிவகை செய்ததுடன் அவர் பயணம் மற்றும் சுற்றுலா போன்ற எண்ணற்ற தலைப்புகளில் எழுதியுள்ளார். கரீம் தற்போது த சண்டே ஐலன்ட் பத்திரிகையின் விவரண ஆசிரியராகவுள்ளார்.

### சந்திரிக்கா விஜேசுந்தர

மராபன மகா வித்தியாலயம் மற்றும் இரத்தினபுரி சீவலி மகா வித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்ற சந்திரிக்கா விஜேசுந்தரவின் ஊடகவியல் துறை மீதான ஆர்வம் அவரது பாடசாலை நாட்களிலேயே ஆரம்பமானது. அவர் 1978 ஆம் ஆண்டு சுயாதீன பத்திரிகைகள் குழுமமான தவச பத்திரிகையில் பயிலுனராக இணைந்து கொண்டார்.

### பென்னெட் ரூபசிங்க

பென்னட் ரூபசிங்க தனது ஊடகவியல் தொழிலை 1963 ஆம் ஆண்டு பத்திரிகைத் துறையில் அடையாள சின்னமொன்றாக விளங்கும் டி.பி. தனபாலவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்தார். அடிப்படை செய்தி அறிக்கையிடலில் தேர்ச்சி பெற்ற ரூபசிங்க, விரைவில் தன தவச ஆசிரியர் குழுவில் இன்றியமையாத உறுப்பினர் ஒருவராக மாறினார். 1964 ஆம் ஆண்டு அவரும் ஏனைய 9 ஊடகவியலாளர்களும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட செய்திப் பத்திரிகை சட்டம் தொடர்பில் தவச பத்திரிகையின் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிலிருந்து வெளியேறினர்.



# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கையெழுத்து போராட்டம்





**(பு.கஜிந்தன்)**

நீண்டகாலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவும் இந்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராளிகளின் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்பும் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்திக் குறித்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் மத தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்திட்டனர்.

# அரிசி பதுக்கலை கண்டறிய வடக்கு மாகாணத்தில் 774 சுற்றிவளைப்புக்கள்



**(கி.வசந்தன்)**

அரிசி தொடர்பில் வட மாகாணத்தில் 774 விசேட சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ள ப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்துள்ளார்.

அரிசி விற்பனை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனம் செலுத்தி 2024 ஆம் ஆண்டு அரிசி விற்பனை தொடர்பான வட மாகாணத்தில் 774 விசேட சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா மாவட்டத்தில் அரிசி தொடர்பில் 126 விசேட சுற்றிவளைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், வட மாகாணத்தில் பெரியளவிலான பதுக்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை என தெரிவித்தார்.

# யாழ். மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க



யாழ்ப்பாண மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. மக்கள் பயமின்ற செயல்படவும் சட்டம் ஒழுங்கை நிறைவேற்றவும் பொலிஸார் தயாராக இருக்கின்றார்கள் என யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ் நகரில் புத்தாண்டுக்கு முன்னிரவு இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட கொலைவெறி தாக்குதல் தொடர்பாகக் கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் கடந்த வாரத்தில் யாழ். நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் நால்வரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இருக்கின்றோம். இரண்டு சம்பவங்களையும் குறித்து புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மேலதிக சாட்சிகளை எடுத்து மிகுதியான சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்றார்.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு



குறைந்த வருமானம் பெறும் மக்களை வலுவூட்டும் செயற்றிட்டம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், கரவெட்டிப் பிரதேச செயலக சமுர்த்தித் தலைமையக முகாமையாளர் ஆர். அன்ரனி வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துகள் வழங்கினார்.

இதில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தித்திறன் சார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கிளீன் ஶ்ரீலங்கா; யாழ்.மாவட்ட பொலிஸாருக்கு விளக்கம்

**(பு.கஜிந்தன்)**

கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கு அமைவாக விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸாரை நெறிப்படுத்தும் கூட்டம் ஒன்று நேற்றுக் காலை நடைபெற்றது.




யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜயசிங்க தலைமையில் இக் கூட்டம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் வீதி போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் போக்குவரத்து பொலிசார் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களுக்கு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெ.ஏ.காளிங்க ஜயசிங்கவினால் கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜெ.பி.எஸ் ஜெயமகா, யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத்தியட்சர் கெ.இ.என் தில்றுக் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# தவற விடப்பட்ட தங்க ஆபரணத்தை ஒப்படைத்தவரைத் தாக்கிய குழு




யாழ்ப்பாணம் – உரும்பிராய் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் உணவு வாங்க வந்த கூலித் தொழிலாளி ஒருவர் நிலத்தில் விழுந்துகிடந்த தங்க ஆபரணத்தை எடுத்து வெதுப்பகத்தில் வழங்கிய நிலையில் இளைஞர் குழு அவரை கட்டிவைத்துத் தாக்கிய காணொளி ஒன்று பதிவிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் கருத்து தெரிவிக்கையில்,

உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றுக்குச் சென்றபோது நிலத்தில் தங்க நகை போன்ற ஆபரணம் இருப்பதை அவதானித்ததாகவும் அதனைக் குறித்த வெதுப்பகத்தில் ஒப்படைத்ததுடன் அது தங்க ஆபரணமா என ஆராய்ந்து உரியவர்களிடம் ஒப்படையுங்கள் எனக் கடந்த 24ஆம் திகதி வழங்கியுள்ளார்.

இரண்டு நாட்கள் கடந்த நிலையில் வெதுப்பகத்திற்கு சென்று வழங்கிய ஆபரணத்தை உரியவரிடம் ஒப்படைத்தீர்களா எனக் கேட்டார். அதற்கு அவர்கள் இன்னும் உரியவர்களிடம் ஒப்படைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து வெதுப்பகத்துக்கு சென்ற நிலையில் அந்தப் பொருளை உரியவர்களிடம் ஒப்படைத்தீர்களா என வினாவியுள்ளார். அதற்கு ஒப்படைக்கவில்லை எனப் பதில் வழங்கினர்.

குறித்த பொருளை ஏதாவது சிறுவர் இல்லத்திற்கு வழங்கி வைப்போம் என கேட்டபோது குறித்த வெதுப்பகத்தில் நின்ற இருவர் அவரின் கழுத்தைப் பிடித்துத் தாக்கியதுடன் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் கம்பத்தில் கட்டிவைத்து தாறுமாறாகத் தாக்கினர்.

முகத்திலும் உடலிலும் அடி காயங்களுக்கு உள்ளாகிய அவர் கோப்பாய் பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் தெரிவித்தார்.

ஆயினும் தாக்கியவர்களை பொலிஸார் கைது செய்யவில்லை. பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி ஒருவர் சமரசம் செய்தார். நியாயம் வேண்டும் என்னைத் தாக்கியவர்களைக் கைது செய்ய வேண்டும், இல்லாவிட்டால் உயிர் மாய்ப்பேன் என பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை ஆதார

# வைத்தியசாலையில் குருதிக்கு தட்டுப்பாடு

**(பு.கஜிந்தன்)**

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது யூ (A Positive), A- (A Negative), மு- (மு நேபயவளைந) ஆகிய இரத்த வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக இரத்ததானம் செய்ய விரும்புவோர் மற்றும் குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் வழங்கி உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த அவசர இரத்ததானம் வழங்குவதன் மூலம் நோயாளர்களுக்கு சிகிச்சையை சீராக வழங்க முடியும் எனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# நோயாளிகளை ஏற்றிச்சென்ற அம்பியூலன்ஸ் விபத்து

**(பு.கஜிந்தன்)**




முழங்காவில் ஆதார வைத்தியசாலையிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளிகளை ஏற்றிச் சென்ற முழங்காவில் வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியூலன்ஸ் நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளாகியுள்ளது. பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பகுதியில், நெல் மூட்டைகளை ஏற்றிச் சென்ற உழவு இயந்தின் மீது மோதியே அம்பியூலன்ஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் அம்பியூலன்ஸின் முன் பக்கம் பாரிய சேதமடைந்துள்ளது. விபத்தைத் தொடர்ந்து நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்குக் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து அம்பியூலன்ஸ் வரவழைக்கப்பட்டுள்ளது.

# விண்வெளியில் துளிர்விட்ட தட்டைப்பயறு






**"விண்வெளியில் உயிர் துளிர்விட்டது"**

இஸ்ரோ வெளியிட்ட எக்ஸ் பதிவில் இருந்த இந்த வார்த்தைகள் மிகவும் உணர்ச்சிப்பூர்வமானவை. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் விண் வெளிக்கு கடந்த டிசம்பர் 30ஆம் திகதியன்று எடுத்துச் செல்லப்பட்டு, பூமியின் சுற்றுப்பாதையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நான்கு நாட்களில் தட்டைப்பயறு விதைகள் துளிர் விட ஆரம்பித்துள்ளன. அதும ட்டுமின்றி, இந்தியாவின் முதல் ரோபோடிக் கையின் செயல்பாடு குறித்த சோதனையும் விண்வெளியில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

**ஈர்ப்பு விசையில்லாத விண்வெளியில் இஸ்ரோ ஒரு தாவரத்தை முளைவிடச் செய்தது எப்படி?**

இஸ்ரோ பி.எஸ்.எல். வி சி-60 ராக்கெட்டில் அனுப்பிய பொயம்-4 என்ற இயங்குதளத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பரிசோதனை CROPS என்று அழைக்கப்படுகிறது. எளிதாகச் சொல்ல வேண்டுமெனில், விண்வெளியில் தாவரங்களை வளர்ப்பதற்கான ஒரு முயற்சி. இஸ்ரோவின் ஸ்பெடெக்ஸ் (SPADEX) திட்டத்தில் அனுப்பப்பட்ட விண்கலனில் தட்டைப்பயறு விதைகள் அனுப்பப்பட்டன. அவை கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையைக் கொண்ட ஒரு சிறிய பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. புவி ஈர்ப்புவிசை இல்லாத நுண்ணீர்ப்பு விசை சூழலில் விதைகள் முளைத்து, இலை விடுமா என்பதை ஆராய்வதே இந்தப் பரிசோதனையின் நோக்கம். அதன் முடிவில், நான்கு நாட்களில் விண்வெளியில் இருந்த தட்டைப்பயறு விதைகள் துளிர்விடத் தொடங்கியுள்ளதாக இஸ்ரோ தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

**விண்வெளியில் உணவு உற்பத்தி சாத்தியமா?**

கடந்த டிசம்பர் 30ஆம் திகதியன்று, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பிஎஸ்எல்வி சி-60 ரக ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. ஸ்பெடெக்ஸ் (SPADEX) திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட அந்த ராக்கெட் இரண்டு விண்கலங்களை பூமியின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியுள்ளதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் அன்றைய தினம் தெரிவித்திருந்தார். அதன் ஒரு பகுதியாக, விண்வெளியில் ஒரு சிறிய ஆய்வுக்கூடமாகச் செயல்படும் POEM-4 என்ற இயங்குதளமும் அனுப்பப்பட்டிருந்தது. நுண்ணீர்ப்புவிசையில் ஆய்வு மேற்கொள்ளும் திறனுடன் இது அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, பூமியின் சுற்றுவட்டப் பாதையில் ரோபோடிக் கையை பரிசோதனை செய்ததோடு, தட்டைப்பயறு விதைகளையும் இஸ்ரோ வெற்றிகரமாக முளைக்க வைத்துள்ளது.

பூமியில் தாவரங்களுக்கு சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் நன்மைகள் விண்வெளியில் கிடைக்காது. அத்தகைய தட்பவெப்பநிலையை செயற்கையாக உருவாக்கி, பூமியில் இருந்து மண் உட்பட தேவையானவற்றைக் கொண்டு சென்று இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறார் பிரேக்த்ரூ சயன்ஸ் சொசைட்டியை சேர்ந்த அறிவியலாளர் வெங்கடேசன். இத்தகைய ஆய்வுகளின் மூலம் விண்வெளியில் தாவரங்களை வளர்ப்பது, உணவு உற்பத்தியில் ஈடுபடுவது ஆகியவை எதிர்காலத்தில் சாத்தியமா என்று கேட்டபோது, அதற்கான தேவையோ சாத்தியக்கூறுகளோ இல்லை என்கிறார் அவர். அதாவது, "விண்வெளியில் உணவு உற்பத்தி செய்வது அடிப்படையில் சாத்தியமில்லை. இந்தப் பரிசோதனையின் மூலம் அங்கு உயிரி தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பது உறுதியாகியுள்ளது. ஆகவே, எதிர்காலத்தில் அத்தகைய ஆய்வுகள் நடக்கலாம்," என அவர் தெரிவித்தார்;.

**விண்வெளியில் இஸ்ரோ தட்டைப்பயறு முளைக்க வைத்தது எப்படி?**

ஸ்பேடெக்ஸ் திட்டத்தின்கீழ், பி.எஸ்.எல். வி சி-60 ராக்கெட், 220 கிலோ எடை கொண்ட இரண்டு சிறிய விண்கலங்களைச் சுமந்து சென்றது. அவை பூமியில் இருந்து 470 கி.மீ உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டன. அவற்றில் ஒன்றின் பெயர் சேசர் (Chaser- SDX01) மற்றொன்று டார்கெட் (Target- SDX02). இதில் டார்கெட் என்ற விண்கலத்தின் ஒரு பகுதியாகத்தான் பொயம்-4 என்ற இயங்குதள ஆய்வுகூடம் அனுப்பப்பட்டது. அதில் விண்வெளியில் சோதனை மேற்கொள்ளத் தேவையான அனைத்து உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்தன. பொதுவாக, வேர் விடுவது முதல் இலைவிட்டு செடியாக வளர்வது வரை தாவரங்களின் வளர்ச்சியில் புவி ஈர்ப்புவிசை குறிப்பிட்ட அளவுக்குப் பங்களிக்கின்றன. ஆனால், விண்வெளியில் ஈர்ப்புவிசையே கிட்டத்தட்ட இருக்காது. இந்தப் பரிசோதனை முற்றிலுமாக தானியங்கி ரோபோடிக் கை மூலம் செய்யப்பட்டது. அதாவது இந்தச் செயல்முறையை விண்வெளியில் ஒருவர் இருந்து நிர்வகிக்க வேண்டிய அவசியம் இல்லை. தாவரத்தின் வளர்ச்சிக்குத் தேவையான தண்ணீரைப் பாய்ச்சுவது, உரிய வெப்பநிலையைப் பராமரிப்பது என அனைத்தும் தானியங்கி முறையில் கையாளப்பட்டன.

**விண்வெளியில் இயங்கும் இந்தியாவின் முதல் ரோபோடிக்கை**

தட்டைப் பயறு தாவரத்தின் வளர்ச்சியினைப் பராமரிப்பதற்கான பணிகளை இஸ்ரோ அனுப்பிய தானியங்கி ரோபோடிக் கை மேற்கொள்கிறது. ஒரே இடத்தில் நிலையாக இருந்து, பொருட்களை இங்கும் அங்குமாக நகர்த்துவதும் எடுப்பதும் மட்டுமின்றி, ஒரு கம்பளிப்புழு ஊர்ந்து செல்வதைப் போல நகர்ந்து சென்று செயல்படக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு இருப்பதே இந்த ரோபோடிக் கையின் சிறப்பம்சம். அதன் மூலம், பொருட்களை எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நகர்த்தவும் இறுகப்பற்றி எடுக்கவும் முடியும். இதுபோக தனது சுற்றத்தில் இருப்பவற்றை உணர்ந்து எப்படிச் செயலாற்ற வேண்டும் என்று முடிவெடுக்க, இதில் கமராக்களும் மேம்பட்ட மென்பொருட்களும் பொருத்தப்பட்டுள்ளன. விண்வெளியில் தட்டைப்பயறு விதைகளை வளர வைப்பதில் இந்த ரோபோடிக் கை கவனம் செலுத்தியதன் மூலம், மொத்தமாக ஒரே நேரத்தில் இஸ்ரோ இரண்டு பரிசோதனைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளது. அதில் ஒன்று நுண்ணீர்ப்பு விசை சூழலில் விதையை முளைக்க வைப்பது. இரண்டாவது, இந்த ரோபோடிக் கையின் திறனைப் பரிசோதிப்பது. இஸ்ரோவின் இந்த முயற்சியின் மூலம், எதிர்காலத்தில் விண்ணில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ள இந்திய விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்களால் செய்ய முடியாத கடினமான பணிகளைச் செய்வதில் ரோபோடிக் கை உதவக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

**எதிர்கால பயன்கள் யாவை?**

இந்தப் பரிசோதனை, ரோபோடிக் கை விசாலமான பகுதியில் நன்கு நகர்வதை உறுதி செய்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. அத்தோடு இஸ்ரோ கூற்றுப்படி, இந்த ரோபோடிக் கை விண்ணில் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போதே பூமிக்கு தரவுகளை அனுப்பவும் முடியும். இந்திய விண்வெளி நிலையத் திட்டமான பாரதிய அந்தாரிக்ஷ் நிலையத்தில் இதைப் பயன்படுத்துவதற்கான ஒரு சோதனை முன்னோட்டமாக இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது. இந்த ரோபோடிக் கையின் சோதனை முன்னோட்டம் வெற்றி பெற்றிருப்பது எதிர்காலத்தில் இந்திய விண்வெளி நிலையத்திற்குப் பல வகைகளில் உதவும் என்கிறார் அறிவியலாளர் வெங்கடேசன்.

மனிதர்களை விண்வெளி நிலையம் அல்லது விண்கலத்திற்கு வெளியே ஏற்படும் கோளாறுகளைச் சரிசெய்ய அனுப்புவது மிகவும் ஆபத்தானது. "தோட்டாக்களைவிட வேகமாக நகரக்கூடிய, கடுகைவிடச் சிறிய, கண்ணுக்கே தெரியாத விண்துகள்கள் விண்வெளியில் இருக்கும். விண்கலத்தை விட்டு வெளியே செல்லும் விண்வெளி வீரர்கள் எவ்வளவு பாதுகாப்புடன் சென்றாலும் அந்த துகள்களால் அவர்களுக்கு எப்போதுமே அபாயம் இருக்கும். அத்தகைய அபாயகரமான சூழலில் பணி செய்ய இந்த ரோபோடிக் கை இருக்கும் போது, மனிதர்களை அப்படி வெளியே அனுப்ப வேண்டிய தேவை ஏற்படாது என அவர் தெரிவித்தார். ஏற்கனவே பல ரோபோடிக் தொழில்நுட்பங்கள் செயல்பாட்டில் இருந்தாலும், பல வகைகளிலும் மேம்பட்ட இந்தத் தொழில்நுட்பம் இந்தியாவின் விண்வெளி ஆய்வுப் பணிகளில் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என வெங்கடேசன் தெரிவித்தார்.

**- நன்றி பிபிசி**

# மத்திய கிழக்கு செல்லும் பெண்களின் அவல நிலை



ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கையில் இருந்து அதிகளவான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக புலம் பெயர்கின்றனர். இதில் ஆண்களை விட பெண்களே அதிகமாக புலம்பெயர்கின்றனர். நாட்டின் வடக்குகிழக்கு உட்பட பல மாகாணங்களில் இருந்தும் தொழில் நிமித்தம் புலம் பெயர்ந்தாலும் பெண்கள் ஏமாற்றப்பட்டு பல துன்புறுத்தல்களுக்கு வீட்டுப் பணிப் பெண் என்ற போர்வையில் அடிமைகளாக நடாத்தப்பட்டு ஏமாறுகின்றனர்.

சட்டரீதியான புலம் பெயர்வுகளுடன் தொழிலுக்காக செல்வதாயின் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து கொள்வது பாதுகாப்பானதாகும் . சிலர் சட்டரீதியற்ற முறையில் வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றனர். சட்டத்தின் பிரகாரம் இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் காணப்படுமாயின் குறித்த தாய், பிள்ளை களை விட்டு விட்டு வெளிநாடு செல்ல முடியாது சிலர் இதனை மீறி சட்ட ரீதியற்ற வகையில் புலம் பெயர்கின்றனர். இதனால் பிள்ளைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்கள தகவலின் படி 2023ம் ஆண்டில் மொத்தமாக 297,656 நபர்கள் பதிவு செய்து புலம் பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது . அந்த வகையில் சில சம்பவங்களை நாம் பார்க்கலாம்.

"சவூதி அரேபியா மதீனாவுக்கு வீட்டு வேலைக்காக 2011.04.06 அன்று சென்றேன் குறித்த வீட்டில் சுமார் ஒன்றரை வருடங்களாக வேலை செய்து வந்த நிலையில் வீட்டு எஜமானி வயோதிப பெண் மணி மரணித்து விட்டார். அதன் பின் எனக்கு சம்பளம் வழங்கப்படாது மீண்டும் ஏஜென்சிக்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கிருந்து ஒரு வீட்டுக்கு பணிப் பெண்ணாக அழைத்து சென்ற போதும் வீட்டுக்குள் அடைத்து பெரும் துன்புறுத்தல்களுக்கு மத்தியில் வீட்டு வேலைகளை சம்பளமின்றி செய்தேன். எந்தவித சம்பளமும் வழங்கப்படவில்லை தொடர்ச்சியாக சுமார் 13 வருட காலமாக எனது உறவினர்களுடனோ குடும்பத்துடனோ எந்த வித தொடர்பும் இன்றி இருந்தேன் அதன் பின்னர் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதகரகத்தில் நாட்டுக்கு வருவதற்காக கொண்டு போய் சேர்த்தார்கள். கையில் இருந்து கடவுச்சீட்டினையும் பறித்து விட்டார்கள் அங்கு அகதிகள் போன்று அடைக்கப்பட்டு சுமார் ஒரு மாதத்தின் பின் உடுத்திய உடையுடன் அங்கிருக்கும் பொலிஸார் ஐம்பது றியால் பணம் தந்து அனுப்பினார் இதன் பின்னர் நாட்டை வந்தடைந்தேன். பெரும் கவலையான விடயம் வெறுங் கையுடன் வந்து எனவு உறவுகளை காணக் கிடைத்தது " என திருகோணமலை மாவட்டம் முள்ளிப்பொத்தானையை சேர்ந்த அப்துல் பரீட் ஹமீதா உம்மா வயது (61) (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தெரிவித்தார்.

இவ்வாறாக வீட்டு வேலைக்காக பணிப் பெண்களாக செல்லும் பெண் கள் இலங்கையில் உள்ள மோசடி முகவர்களிடம் இருந்து ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அரச அங்கீகாரம் பெற்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்த முகவர்களிடம் இருந்து. தம்மை பதிவு செய்து சட்ட ரீதியாக செல்வதை பணியகம் வலியுறுத்துகிறது இதனால்தான் ஆண்கள் வெளிநாடு செல்வதாக இருந்தால் ஒரு தொகை பணம் முகவர் நிலையத்துக்கு வழங்கப்பட்டும், பெண்கள் புலம் பெயர்வுக்காக பணிப் பெண்களுக்கு முகவர்கள் ஊடாக ஒரு தொகை வழங்கப்படுகிறது இது ஏன் இவ்வாறு இடம் பெறுகிறது என பார்த்தால் பாதுகாப்பான புலம் பெயர்வை ஊக்குவிப்பதற்காக இடம் பெறுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

"முகவர் ஊடாக சொல்லப்பட்ட சம்பளம் வழங்கப்படவில்லை 140 தினார் தருவதாக சொல்லி 120தினார் தந்தார்கள் என குவைட் நாட்டுக்கு பணிப் பெண்ணாக சென்று நாடு திரும்பிய தம்பல காமம் மீரா நகர் பகுதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான சமீனா பேகம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வயது (31) தெரிவித்தார்."






தொடர்ந்தும் தெரிவித்த அவர் சமையல் வேலைக்காக என்று தான் நினைத்து சென்ற தருணம் அங்கு பிள்ளை பராமரிப்பிற்காக விட்டார்கள். நான் இருந்த வீட்டுக்காரன் இரு திரும ணம் முடித்துள்ளார். வெள்ளிக்கிழமைகளில் மற்றொரு திருமணத்தில் உள்ள பிள்ளைகளும் வருவார்கள் ஒட்டு மொத்த குடும்பத்துக்கும் சமைத்து வீட்டு வேலை செய்து பிள்ளைகளை பராமரிப்பதும் கஷ்டமாக இருந்தது. இதனால் வீட்டு எஜமானிடம் வேலையை மாற்றுமாறு கோரினேன் முடியாது என்றார்கள் சுமார் மூன்று மாதம் கழித்து வீட்டை விட்டு வெளியேறி பொலிஸாரின் பாதுகாப்பின் மூலமாக வெறுங் கையுடன் நாட்டை வந்தடைந்தேன்" என்றார். இவ்வாறான ஏமாற்றத்தால் பல பணிப்பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டு பல சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். அதிகமாக வறுமை காரணமாக பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம் பெயர்கின்றனர். இதனால் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புபணியக தகவலின் படி 2023ம் ஆண்டில் 69.17 வீதமான ஆண்களும் 30.83 வீதமான பெண்களும் உயிரிழந்துள்ளனர். இதில் மொத்தமாக 376 பேர் இயற்கை மரணங்கள் எனவும்,33 தற்கொலைகளும் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழிலுக்காக புலம் பெயர்வதாக இருந்தால் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஊடாக முறையாக வழங்கப்படும் சட்ட ரீதியான பயிற்சிகளை பெற்று தங்களை பதிவு செய்து கொள்வது பாதுகாப்பானதான அமையும் இதனால் ஏற்படும் இழப்புக்களை பணியகம் பொறுப்பேற்கும். இதனை புறந்தள்ளி சட்ட ரீதியற்ற முறையில் புலம் பெயர்ந்தால் பாதுகாப்புக்கான உத்தரவாதம் கிடைக்கப் பெறாது. பணியகம் ஊடாக ஒருவர் காப்புறுதிக்காக பதிவு செய்வதானது இரு வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்து தங்கள் பாதுகாப்பான புலம் பெயர்வுகளை தொடர முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

"டுபாய் நாட்டுக்காக பணிப்பெண்ணாக வீட்டு பணியாளராக சென்றிருந்தேன் சுமார் மூன்று மாத காலமாக அங்குள்ள ஏஜென்சி மூலமாக வேலைக்கு சென்று வந்தாலும் சம்பளத்தை தரமாட்டார்கள். அவர்களே பிடுங்கி எடுத்து விடுவார்கள். தினமும் காலை 8.00 மணிக்கு சென்றால் மாலை 4.00 மணிக்கு ஏஜென்சிக்கு திரும்பிடுவோம் சாப்பாடு ஒழுங்காக தரமாட்டார்கள். காலை ஆகாரமாக தேநீர் மாத்திரமே வழங்கப்படும். மூன்று மாதங்கள் கழித்து கல்மலை பிரேச ஒரு அரபியின் வீட்டுக்கு கொண்டு சேர்த்தார்கள் அங்கு குழந்தைகளை பராமரிக்க வேண்டும். என்னால் பராமரிக்க முடியாது என்று கூறிய போதும் கடுமையாக தாக்கினார்கள் சாப்பாடு தரமாட்டார்கள் இதனால் மனமுடைந்து போய்விட்டேன் எனவும் 2022.12.92 ம் திகதி அன்று மீண்டும் இலங்கை தூதரகத்து சென்று 14 நாட்களின் பின் நாடு திரும்பினேன் "என திருகோணமலையை சேர்ந்த அஸ"சா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வயது (27) தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

அதிகளவான பெண்கள் புலம் பெயர்தல் ஊடாக மனித கடத்தல் எனும் பாதகமான விளைவுக்கு உட்படுத்த ப்படுகிறார்கள் இதில் பாதிக்கப்படுவது பெண்களே . எனவேதான் போலியான முகவர்களிடம் இருந்து ஏமாறாமல் சட்ட ரீதியான புலம் பெயர்வுகளுக்காக அனைவரும் இணைந்து சமூகத்தை விழிப்படையச் செய்வோம்.

## நிதி மோசடி குற்றச்சாட்டு

# கல்விப் பணிப்பாளருக்கு ஒழுக்காற்று விசாரணை

(எம்.ரீ.ஆரிப்)

அநுராதபுரம் கல்வி வலயத்திலுள்ள 28 பாடசாலைகளில் கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர் களுக்கான கணிதப் பாட முகாம்களை 14 பாடசாலை மாணவர்களுக்கு நடத்தாமல் போலி ஆவணங்களை சமர்ப்பித்து ஆறு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்ததாக கூறப்படும் அநுராதபுரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக வடமத்திய மாகாண பிரதான செயலாளர் வருண சமரதிவாகார ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் ஐந்து குற்றச்சாட்டுக்கள் உள்ளடங்கிய குற்றப்பத்திரம் பிரதான செயலாளர் வருண சமரதிவாகார வினால் (>y NCP /CS /ED/15/111/2/40) 2024.07.16 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அநுராதபுரம் வலய கல்விப் பணிப்பாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கணிதப் பாட பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கில் 28 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 30 நிலையங்களில் 2022.10.17 முதல் 2022.10.26 வரையிலான காலப்பகுதியில் கணித முகாம்களை நடத்துவதற்கு மாகாண கல்வி அமைச்சு திட்டமிட்டிருந்தது.

எனினும் திட்டமிட்டபடி குறித்த காலப்பகுதியில் அநுராதபுரம் கல்வி வலயத்தில் 14 பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் இந்த கணித முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 14 பாடசாலை மாணவர்களுக்கு கணிதப் பாட முகாம் நடத்தப்பட்டதாக கூறி போலி ஆவணங்களை சமர்ப்பித்து முறைகேடு செய்தமை பாரிய தவறு என வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பிரதான செயலாளர் அனுப்பியுள்ள குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கணித முகாம்களை நடத்துவதற்கு தேவையான பணித்தாள்கள் அச்சடித்த மைக்கான போலி பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்து ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா நிதி மோசடி செய்துள்ளதாகவும் இது தவிர கணித முகாம்களை நடத்துவதற்கு ஆதரவு அளித்த ஆசிரியர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டதாக பொய்யான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதான செயலாளர் அனுப்பியுள்ள குற்றப்பத்திரிகையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# ‘ஆனந்தாபிமானி’ கௌரவ நாமம்

## முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் கௌரவ அதிதி



கொழும்பு ஆனந்த கல்லூரி குலரத்ன கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை (06) நடைபெற்ற பிரதம சங்க நாயக்க தேரர் திவியா கஹ யசஸ்ஸி தேரருக்கு ‘ஆனந்தாபிமானி’ கௌரவ நாமம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

சியம் பீடத்தின் மல்வத்து பீடம், அஸ்கிரி பீடம், அமரபுர பீடம் மற்றும் ராமஞ்ஞ பீடம் ஆகிய பீடங்களின் பிரதம மகாநாயக்க தேரர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பு



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக, குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட எம்.டீ.எம்.முஸம்மிலுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை (04) கல்கமுவ, வல்பாலுவ பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், மாவட்ட அமைப்பாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான எம்.டீ.எம்.முஸம்மில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான இர்பான், அஷார்டீன் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அஷாட் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தெவிநுவர கடலோரப் பகுதிகளை சுத்தம் செய்யும் உல்லாசப் பயணிகள்



மாத்தறை–தெவிநுவர பகுதிக்கு வருகை தந்த வெளிநாடு உல்லாசப் பயணிகள் தெவிநுவர கடலோரப் பகுதிகளை சுத்தம் செய்வதை படங்களில் காணலாம்.

(படங்கள் : வெலிகம நிருபர்)

# மாபெரும் இரத்ததான நிகழ்வு

(எம்.யூ.எம். சனூன்)



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளை, புத்தளம் பெரிய பள்ளி, புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரி சங்கம், நஹ்தா அமைப்பு, புத்தளம் நகர சபை, புத்தளம் தள வைத்திய சாலை மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் இரத்த தான நிகழ்வு புத்தளம் மன்னார் வீதியில் அமைந்துள்ள தாய் சேய் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை (04) நடைபெற்றன.

குறிப்பாக உலமாக்கள் மற்றும் புத்தளம் காஸிமிய்யா மத்ரஸா மாணவர்களும் இரத்தம் வழங்கினர். இரத்தம் கொடுப்பவர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு பௌத்த, இந்து,கிறிஸ்தவ மத குருமார்கள் உட்பட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைசல் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

## ஜே.எம்.ஜே மீடியாவின்

# மரக்கன்றுகள் நடுகைத் திட்டம்

(அரபாத் பஹுர்தீன்)



ஜே.எம்.ஜே மீடியா நிறுவனம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஜனவரி மாதம் முதல் வாரத்துடன் வெற்றிகரமாக நிறைவு செய்தது.

ஜே.எம்.ஜே மீடியாவின் நிறுவன பணிப்பாளர் ஜஸ்ரா ஜலீலின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வு ”இயற்கையை காக்க வேண்டும்” என்ற நோக்கத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இலங்கை, மலேசியா, இந்தியா, சிங்கப்பூர் , சவூதி அரேபியா, அவுஸ்திரேலியா, கத்தார், குவைத் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளிலும் உள்ள ஜே.எம்.ஜே மீடியா இன் ஒருங்கினைப்பாளர்கள் மூலம் இந்த மரம் நடுகைத் திட்ட நிகழ்வு நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

மேலும் இதில் 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டத்தோடு இதில் சிறுவர்கள் கலந்து கொண்டமை இத் திட்டத்தின் வெற்றியும் சிறப்பம்சமுமாகும்.

# அவுஸ்திரேலியா பயணமாகும் திம்புலாகல பிரதேச செயலாளர்



(காத்தான்குடி நிருபர்)

திம்புலாகல பிரதேச செயலாளராக கடமையாற்றும் எஸ்.எம்.அல்அமீன் தனது உயர்கல்விக்காக அவுஸ்திரேலியாவுக்கு செல்லவுள்ளதை பாராட்டி ஏறாவூரில் கௌரவிக்கப்பட்டார்

ஏறாவூரில் பிறந்த இவர் இன்று தேசத்தின் கீர்த்தி மிகு நிருவாக சேவையில் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

திம்புலாகல பிரதேச செயலாளராக கடமையாற்றும் அல்அமீன் தனது உயர்கல்விக்காக அவுஸ்திரேலியா நாட்டுக்கு செல்ல இருப்பதை முன்னிட்டு அவருக்கான கௌரவிப்பு நிகழ்வு (05) ஞாயிற்றுக்கிழமை மாலை ஏறாவூர் நகர சபை கேட்போர் கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.நளீம் தலைமையில் அவரது ஏற்பாட்டில் இடம் பெற்றது.

# கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி



கொழும்பு, புதுச்செட்டித் தெரு, ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைகுண்ட ஏகாதசி திருநாள் கொண்டாடப்படும்.

வருடத்தில் பன்னிரண்டு மாத காலத்தின் தலையாய மாதம் – கேசவ மாதம் எனப்படும் பிரம்ம முகூர்த்தமாக மார்கழி மாதம் விளங்குகிறது. அந்நாளில் பகவானின் தரிசனத்திற்காக தேவர்கள் வைகுண்ட வாசலில் காத்து நிற்கும் சமயம் வைகுண்ட வாசல் திறக்கப்பட்டு அனைவருக்கும் தரிசனம் கொடுக்கும் திருநன்னாள். அந்நாளில் பகவானின் நாமங்களையும் புகழையும் பாடி அவர் சிந்தனையில் மூழ்கியிருப்பது சிறந்தது.

ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் அன்றைய தினம்காலை 5.00 முதல் இரவு 9.00 மணிவரை பகவத் தரிசனமும் நாமம் ஜெபித்தல், பாடுதல், அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

# கல்முனை விகாரையில் அன்னதான மண்டபம்

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம் ஹரீஸின் டீ-100 திட்டத்தினூடாக ஜனாதிபதி செயலகத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கல்முனை ஸ்ரீ சுபத்ராராம மகா விகாரையின் அன்னதான மண்டப திறப்பு விழா கல்முனை பிரதேச செயலாளர் டி.எம்.எம் அன்சார் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை ஸ்ரீ சுபத்ராராம மகா விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர், மாணிக்கமடு ரஜமகா விகாரையின் விகாராதிபதி சீலாரத்தன தேரர் ஆகியோரின் பிரசன்னத்துடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம



அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு விகாரையின் அன்னதான மண்டபத்தை திறந்து வைத்தார்.

# கருப்பன சாமி பூஜை

(க.மகாதேவன்)



சபரிமலை செல்லும் யாத்திரிகர்களின் பூஜைகளில் கருப்பன சாமி பூஜை மிகவும் பிரபல்யமானது.கடந்த சில நாட்களுக்கு முன்னர் முன்னேஸ்வரத்தில் கருப்பன சாமி பூஜை இடம்பெற்றது.இதில் உடப்பிலிருந்து ஐ.வேல் முருகனின் இசையில் பல பக்த கீதங்களும் இசைக்கப்பட்டது.இதில் பல் சாமிமார்கள் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் விஜித்தவுக்கு மக்கள் போராட்ட முன்னணி கடிதம்

அமைச்சர் விஜித ஹேரத்துக்கு மக்கள் போராட்ட முன்னணிடிஜிட்டல் அடையாள அட்டைகள் தொடர்பில் கவலை தெரிவித்து கடிதமொன்றை அனுப்பியுள்ளது. அதாவது , அக்கடிதத்தில் ‘இலங்கை பிரஜைகளுக்கான டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்குவதை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கும் அரசாங்கத்தின் முடிவு குறித்தே மக்கள் போராட்ட முன்னணி குறிப்பிட்டுள்ளது..

மேலும் அமைச்சர் விஜித ஹேரத்துக்கு எழுதிய கடிதத்தில், தற்போதைய ஜனாதிபதியின் இந்திய அரச சுற்றுப்பயணத்தின் போது செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை பிரஜைகளுக்கு டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்கும் அதிகாரம் இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும், இது தொடர்பிலான இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசாங்கம் 2025 ஜனவரியில் இறுதி செய்யும் என

அவர் அண்மையில் கூறியதை கட்சி முன்னிலைப்படுத்தியுள்ளது.

“இந்த ஒப்பந்தம் ஜனநாயக உரிமைகள், தேசிய பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு, தேசத்தின் பொருளாதாரம் மற்றும் அரசு மற்றும் அதன் மக்களின் இறையாண்மைக்கு தவிர்க்க முடியாத ஆபத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

ஒரு இந்திய நிறுவனம் டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்க அனுமதித்த வரலாற்றை மறு ஆய்வு செய்வது மிகவும் முக்கியமானது,” என்று கட்சி மேலும் கூறியது.

மக்கள் போராட்டக் முன்னணி மேலும் தெரிவிக்கையில் “நாம் தகவல்களின் சகாப்தத்தில் வாழ்கிறோம், மேலும் ஒரு நாடு தனது மக்களின் தகவல்களையும் தரவுகளையும் மற்றொரு வெளி நாட்டிற்கு வழங்குவது பாரிய ஆபத்து.

ஒரு தேசம் தனது மக்களின் தகவல்களை வேறொரு நாட்டிலிருந்து பெறுவதன் மூலம் கூட அடிபணிய வைக்க முடியும். அந்த மூலோபாயத் தலையீட்டை இந்தியா இன்று இலங்கையில் செய்து வருகிறது. இந்த நிலையில், இலங்கை மக்களின் பொது பாதுகாப்பு பெரும் ஆபத்தில் உள்ளது.

புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்களைப் பெறும் அதே வேளையில், இந்திய நிறுவனத்திடம் டிஜிட்டல் அடையாள அட்டை பணியை ஒப்படைக்கும் முடிவை உடனடியாக திரும்பப் பெறுவதற்கான முன்மொழிவை நாடாளுமன்றத்தில் கொண்டு வர வேண்டும் என்று கட்சி வலியுறுத்தியது.

# முச்சக்கரவண்டி பஸ்ஸுடன் மோதியதில் சிறுவன் பலி

(க.மகாதேவன்)

ராஜாங்கனை, அநுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியில் புத்தளத்திலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி வீதியில் கவிழ்ந்து எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

ஞாயிறு இரவு (05) முச்சக்கரவண்டி, வீதியைக் கடக்கின்றபோது நாயுடன் மோதுவதைத் தவிர்க்க முற்பட்ட வேளையில், முச்சக்கரவண்டி கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும் பின் இருக்கையில் பயணித்த சிறுவனும் காயமடைந்து நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுவன் உயிரிழந்தார்.

சாரதி மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்டுள்ளார்.சிலாபம் – வெலிஹேன பிரதேசத்தில் வசிக்கும் 12 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ராஜாங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கலைகள் இல்லாமல் போனால் கலாசாரமும் காலாவதியாகிவிடும்

(வெல்லாவெளி நிருபர்)

கலைகள் இருக்கின்ற வரையில் தமிழர்களின் பண் பாடும் வேரூன்றி நிலைத்து நிற்கும். கலைகள் இல்லாத போனால் எமது பண்பாடும் கலாசாரமும் காலாவதியாகிவிடுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் பழுகாமம் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை (04) பாஞ்சாலி கலைக் கழகத்தினரால் இரண்டு தசாப்தங்களின் பின்னர் கிராமியக் கலையாகிய "வள்ளிதினைப்புனம்" எனும் கரகம் மீள் உருவாக்கம் செய்யப்பட்டு சதங்கை அணிவிழா நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிராமத்து மக்கள்தான் இந்த கலைகளை அழியாமல் தொடர்ந்தும் பேணிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த கலைகளை பேணுவதன் மூலமாக தமிழின் இருப்பையும் அவர்கள் பேணிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்களின் இருப்பில் ஒன்றாக உள்ளதுதான் தமிழர்களுடைய பண்பாட்டுக் கலைகள் என்பதை மறந்து விட முடியாது.

அவ்வாறான பண்பாட்டுக் கலையினை பழுகாமத்து மண் மறந்து விடாமல் 1966ஆம் ஆண் டிலிருந்து தற்போது வரையிலும் கலைகளை வளர்த்துக் கொண்டு வருகின்றது.

தற்போது 2025ஆம் ஆண்டில் உற்று நோக்குகின்ற போது பல தசாப்தங்களை கடந்தும் இந்த மண்ணிலே கலைத்துவமும், கலைகளும், பதிந்து இருக்கின்றன. அது பழுகாமம் மண்ணுக்குரிய ஒரு உண்மையான தொண்டு என்று கூறலாம்.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை) பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் அப்பகுதி மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



## அக்கரைப்பற்று கடற்கரையில் சன்ரைஸ் விளையாட்டுக் கழகம் சிரமதானம்

(அக்கரைப்பற்று நிருபர்)



"கிளீன் ஸ்ரீலங்கா" தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக அக்கரைப்பற்று சன்ரைஸ் விளையாட்டுக் கழகத்தினர் கடற்கரைப் பிரதேசத்தை சிரமதானம் மூலம் துப்புரவு பணி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதேவேளை, சன்ரைஸ் விளையாட்டுக்கழகத்தினர் மாதத்தின் முதலாவது சனிக்கிழமைகளில் சிரமதானம் மூலம் துப்புரவு பணியில் ஈடுபட்டு வருவது வழக்கம்.

இந்நிகழ்வின்போது, சன்ரைஸ் கழகத் தலைவர் எம்.எச்.ஜெயினுதீன் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் நமது கடற்கரைப் பிரதேசத்தை பாதுகாப்பது எமது பொறுப்பும் கடமையுமென்றும் தெரிவித்தார்.

எமது பிரதேசக் கடற்கரை என்ற உணர்வு எம்மத்தியில் எப் போதும் இருக்க வேண்டும். நாம் இதனைப்பாதுகாப்பதற்கு உதவ முடியாவிட்டாலும் இதனை மோசமான நிலைக்கு தள்ள வேண்டாம். எனவும் மிகவும் வினயமாக வேண்டியுள்ளார்.

## ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் கைது

(கே.எ.ஹமீட்)

ஐஸ் போதைப் பொருளுடன் 22 வயதுடைய சந்தேக நபரை விசேட அதிரடிப் படையினர் நேற்றுமுன்தினம் (05) ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாங்காமம் பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (5) மாலை சம்மாந்துறை மற்றும் அம்பாறை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட தேடுதலின் போது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து ஒருதொகை ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலத்தில் போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலி உடைப்பு



(கியாஸ் ஷாபி)

கிண்ணியா – குறிஞ்சா கேணி பாலத்தில் பயணிகளின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த கம்பி வேலிகளின் ஒரு பகுதி, உடைத்து ஆற்றில் வீசப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று (6) அதிகாலை இனந் தெரியாதோரால், மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

1977ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த பாலம், காலாகாலமாக அரிப்புக்கு உள்ளாகி, அண்மைக் காலமாக இடிந்து விழும் நிலையிலிருந்தது.

இந்த பாலத்தை, புதிதாக நிர்மாணித்து தருமாறு மக்கள் தொடர்ச்சியாக கவன ஈர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர். இதன் காரணமாக, இந் தப்பாலத்தை நிர் மாணிப்பதற்காக 2021 ஆண்டு 226.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் 2021.04.22 ஆம் திகதி பாலத்தின் மீள் கட்டு மாண பணிகள் இடம் பெற்றிருந்தபோது, போக்குவரத்துக்காக தற்காலிகமாக படகு ஒன்று போடப்பட்டிருந்தது.

இந்தப் படகு 2021.11.21 திகதி விபத்துக்குள்ளானதில், ஐந்து சிறுவர்கள் உட்பட 8 பேர் பலியான துயரமான சம்பவம் ஒன்று, அன்று இடம்பெற்றிருந்தது. எனினும், இந்த பாலம் இன்னும் புனரமைப்பு செய்யப்படவில்லை.

இப்பாலத்தின் ஒரு பகுதியில் பயணிகளின் பாதுகாப்புக்காக இரும்பு கம்பிகள் மாத்திரம் நடப்பட்டிருந்தன. இந்த கம்பிகளே நேற்று இனம் தெரியாததோரினால் உடைத்து ஆற்றில் வீசப்பட்டுள்ளன.

ஏற்கனவே, இந்தப் பாலத்தின் ஊடாக ஆபத்தான கட்டத்தில் பயணம் செய்த நாங்கள், மேலும் ஆபத்தை எதிர்நோக்கி இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். பாதுகாப்பற்ற இந்த பாலத்தின் ஊடாக, இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பயணம் செய்வது? பொறுமை இழந்த மக்கள், ஆத்திரமடைந்தே இதனைச் செய்திருக்கிறார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். மக்கள் எவ்வளவு காலத்துக்குதான் பொறுமை காப்பது? புதிய அரசாங்கத்திலாவது இந்த பாலம் நிர்மாணிக்கப்படுமா? என்று மேலும் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## மண்டூர் மகாவித்தியாலயத்தில் எழுத்தறிவு மையம் திறந்துவைப்பு

(செ.துஜியந்தன்)





பட்டிருப்புக்கல்வி வலயத்தின் போரதீவுப்பற்றுக் கோட்டத்திலுள்ள மண்டூர் மகா வித்தியாலயத்தில் அதிபர் புத்திசிகாமணியின் தலைமையில் முறைசாராக் கல்விப்பிரிவின் ஒழுங்கமைப்பில் எழுத்தறிவு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் கலந்து கொண்டார். அத்துடன் முறைசாராக் கல்விப் பிரிவின் இணைப்பாளர் திருமதி.றீ.கலைச்செல்வன், அயற்பாடசாலையின் அதிபர் சத்தியமாறன், பாடசாலையின் அபிவிருத்திசங்க செயலாளர், உறுப்பினர்கள், பழையமாணவர் சங்கத்தலைவர், பழைய மாணவர்கள், பெற்றார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முறைசாராக் கல்விப்பிரிவால் பரிகாரக் கற்பித்தல் செயற்பாட்டுக்காக பயிற்றுவிக்கப்பட்ட எழுத்தறிவு மையத்தின் பொறுப்பாசிரியரான அபிவிருத்தி உத்தியோகத்தர் மயூறுதா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு பரிகாரக் கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## மருதமுனை ஹவுஸ் ஒப் இங்கிலிஸ் வித்தியாரம்ப நிகழ்வு



(திகாமடுல்ல நிருபர்)

மருதமுனை ஹவுஸ் ஒப் இங்கிலிஸ் (ஆங்கில முன் பள்ளி பாலர் பாடசாலையின்) 11வது வித்தியாரம்ப நிகழ்வு பாடசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

முகாமைத்துவ பணிப்பாளர் ஜெஸ்மி எம்.மூஸா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப் பிரதம அதிதியாகவும், முகாமையாளரும், சிரேஷ்ட ஆசிரியையுமான சுமைய்யா, விசேட அதிதியாக கலந்து கொண்டார். மகிழ்ச்சியான பாடசாலை ஆரம்பத்திற்கான செயற்பாடுகள் உட்பட மாணவர்களின் கலை நிகழ்வுகளும், ஆற்றல்களை வெளிப்படுத்தும் போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## தங்கப்பதக்கம் பெற்றார் நஜிமுத்தீன்



(எஸ்.எம்.அறூஸ் )

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப் புச்சபையின் அம்பாரை பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தில் முகாமைத்துவ உதவியாளராக (மனிதவளம்) கடமையாற்றும் என்.எம். நஜிமுத்தீன் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் (NILS) (DIPLOMA IN HUMAN RESOURCE MANAGEMENT 2023) வெற்றிகரமாக பூர்த்தி செய்து அதில் விசேட தரத்தை பெற்று பதக்கமும் பெற்று பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவருக்கான பட்டமளிப்பு விழா அண்மையில் BMICHயில் நடைபெற்றது. அக்கறைப்பற்றைச் சேர்ந்த நஜி முடீன் சமூக சேவை அமைப்புக்களை உருவாக்கி மக்களுக்கு பல்வேறு பணிகளையும், சேவைகளையும் ஆற்றிய ஒருவராவார்.

## பாடசாலையின் சுற்று வேலிகளை துவம்சம் செய்த காட்டுயானைகள்

(வெல்லாவெளி நிருபர்)

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள தும்பங்கேணி இளைஞர் விவசாய திட்டக் கிராமத்தினுள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை(05) இரவு உட்புகுந்த மூன்று காட்டுயானைகள் அங்குள்ள வெள்ளிமலைப் பிள்ளையார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள பாலர் பாடசாலை ஒன்றின் சுற்றுவேலிகளை துவம்சம் செய்து விட்டு சென்றுள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவுபற்று பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக இருந்த இவ்வாறு காட்டுயானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. இதனால் அப்பகுதியிலுள்ள, வெல்லாவெளி, வேத்துசேனை, காக்காச்சிவட்டை, விவேகானந்தபுரம், தும்பங்கேணி, திக்கோடை, களுமுந்தன்வெளி, உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக அங்கலாய்க்கின் றனர்.

அப்பகுதியில் அமைந்துள்ள தளவாய் காட்டினை அண்மித்த சூழலில் சுமார் 30இற்கும் மேற்பட்ட காட்டுயானைகள் பகலில் தங்கி நிற்பதாகவும், பின்னர் இரவு வேளை களில் யானைகள் இவ்வாறு தினமும் கிராமங்களுக்குள் உட்புகுந்து வீடுகளையும். பாடசா லைகளும், பயிரினங்களையும் துவம்சம் செய்து வருவதோடு, மக்களையும், மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளையும் அழித்து வருவதாகவும், அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## யானைக்கு பயந்து ஓடியவர் ஆற்றில் விழுந்து மரணம்

(கனகராசா சரவணன், பேரின்பராஜா சபேஷ்)

காட்டு பகுதியில் விறகு வெட்ட சென்ற தந்தையும் 14 வயது மகனும் யானையை கண்டு உயிரை காப்பாற்ற தப்பியோடி ஆற்றில் குதித்த நிலையில் தந்தை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கி உயிரிழந்த தந்தையின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (05) காலையில் மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள முந்தானையாற்று பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். மயில வெட்டுவான் ஊப்போடை வீதியைச் சோந்த 49 வயதுடைய ஞானப்பிள்ளை அரணாகரன் என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த தந்தையும் அவரது 14 வயதுடைய மகனும் காட்டையண்டிய பகுதியில் விறகு வெட்டி வருவதற்காக காலை 9 மணியளவில் சென்றுள்ளனர் .இதன்போது அங்கு யானையை கண்டு அதில் இருந்து தங்களின் உயிரை காப்பாற்றுவதற்காக அங்கிருந்து தப்பி ஓடி அருகிலுள்ள முந்தனையாற்றில் குதித்துள்ளனர்.

இதனையடுத்து நீரில் மூழ்கிய 14 வயது சிறுவன் வெளியில் வந்த நிலையில் தந்தையார் நீரில் அடித்துச் செல்லப்பட்டதை அறிந்துள்ளார். இதனையடுத்து பொலிசார் கடற்படை உதவியுடன் உறவினர்கள் அந்த ஆற்றுப் பகுதியில் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியானாறு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நன்னீர் மீனவர்களுக்கு வள்ளங்கள் வழங்கி வைப்பு



(எஸ்.எம்.முபீன்,அபு அலா)

வறுமைக் கோட்டின் கீழ் இருந்து நன்னீர் மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளிகளின் தொழிலை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை இன்னும் உயர்வடையச் செய்வதற்கான வாழ்வாதார உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றோம் என்று றொட்டரி கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரனதுங்க தெரிவித்தார்.

திருகோணமலை – கோபாலபுரம் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்ற மீனவர்களுக்கு நிறுவனத்தினால் வள்ளம் வழங்கி வைக்கும் நிகழ்வு கோபாலபுரம் மகளிர் சங்கத் தலைவி திருமதி எஸ்.நிஹாரா தலைமையில் கோபாலபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் (05) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக றொட்டரி கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரனதுங்க கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாது

## கொட்டகலையில் தீர்மானம்

( க.கிஷாந்தன் )

தங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை காரணமாக, அதற்கான உரிய தீர்வை வழங்குமாறு கோரி கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் ஜனாதிபதிக்கும் வர்த்தக அமைச்சருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதற்கு உரிய தீர்வு கிடைக்காவிடின், அரிசி விற்பனையிலிருந்து விலகியிருப்பதற்கு கொட்டகலை - ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

கொட்டகலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அந்த சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யுமாறு கொட்டகலையில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் சிவப்பரிசுக்கான உட்சபட்ச சில்லறை விலையாக 220 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும் தங்களுக்கு சிவப்பரிசி மற்றும் வெள்ளையரிசி ஒரு கிலோகிராம் 295 ரூபாய் என்ற மொத்த விலையில் புறக்கோட்டை சந்தையில் கிடைக்கப்பெறுகிறது.

இவ்வாறான பின்னணியில், தங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாதென கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசி 235 ரூபாவுக்கு மொத்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதுடன், போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளுடன் ஒப்பிடும் போது உரிய விலையில் விற்பனை செய்ய முடியாதென கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.



# நீண்டநாட்களாக தேடப்பட்டு வந்த திருடன் கைது

( பு.கஜிந்தன் )

திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்பு உள்ளதாக சந்தேகிக்கப்படும், வடமராட்சி - குடத்தனை, மாளிகைத்திடல் பகுதியை சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் மருதங்கேணி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் கம்பெனியின் சொத்துக்கள், ஆவணங்கள், தொலைபேசி மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை திருடிய சம்பவத்தின் சந்தேகத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்களாக பொலிசார் வலைவீசி வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அதிரடியாக மருதங்கேணி பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்ய சென்ற பொலிசாரை தாக்கியதுடன் தப்பி ஓட முயன்றதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குறித்த நபரை மருதங்கேணி பொலிசார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு தினம்

( மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட் )

மன்னார் - வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 40 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.



நிகழ்வு நேற்று (6) திங்கட்கிழமை காலை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு மாலை அனுபவிக்கப்பட்டுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குருக்கள் மற்றும் கிராம மக்கள் சுடர் ஏற்றி மலர் தூவி படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை மற்றும் மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தும்,உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும், பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.

மேலும் அவருடன் பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். திருப்பலியின் போது அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக்குத் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப் பட்டுள்ளது.

# மூதூர் சுகாதார பிரிவில் புகை விசிறும் நடவடிக்கை



( எம்.என்.எம்.புஹாரி )

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அல்லைநகர் கிழக்குப் பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான புகை விசிறும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் டெங்கு நோயாளர்கள் பலர் இனம் காணப்பட்டதை அடுத்து டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

# அரசியல் கைதிகளின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்த வேண்டும்

( பு.கஜிந்தன் )

எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட இந்த போர் தொடர்பாக, சர்வதேச நாடுகளுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது ஒரு சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிவகஜன் தெரிவித்துள்ளார்.



அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து வேட்டையின் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டு, அல்லது அதற்குப் பின்னரான நிலப்பகுதியில் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் முன்னெடுத்து வரும் கையெழுத்து வேட்டைக்கு வலுச் சேர்க்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தமது ஆதரவை வழங்கியுள்ளது.

2017ஆம் ஆண்டு நிலப்பகுதியில் 162ஆக இருந்த தமிழ் அரசியல் கைதிகளில், தற்போது 10 பேர் தொடர்ந்தும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். அவர்களில் எட்டு பேர் மீது நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இருவர் இதுவரை வழக்கு விசாரணைகள் இல்லாமல் தொடர்ந்தும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

கிளீன் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டத்தை இந்த அரசு நாட்டில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த அரசின் கரங்களானது, ஒரு இனத்தின் கரங்களில் வலிந்து திணித்த போரின் காரணமாக ஏற்பட்ட இரத்தக்கறை படிந்து காணப்படுகின்றது. அதனை அரசு சுத்தம் செய்வதற்கு முன் வரவேண்டும் என மாணவர்களாக நாம் வேண்டி நிற்கின்றோம்.

இனப்படுகொலை போர்க் குற்றத்திற்கு இந்த அரசு பொறுப்புக் கூற வேண்டும். இந்த இனப்படுகொலை போருடன் தொடர்பு பட்டவர்கள் தான் இந்த அரசியல் கைதிகள். அவர்களை வெறுமனே அரசியல் கைதிகள் என்று அழைப்பதற்குப் பதிலாக, சர்வதேச பன்னாட்டுச் சமவாயங்களுக்கு அடிப்படையிலே அவர்களை நாங்கள் போர் கைதிகள் என்று தான் அழைக்க வேண்டும்.

எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட இந்த போர் தொடர்பாக, சர்வதேச நாடுகளுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது ஒரு சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும்.

அவ்வாறு இது சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டுமேயானால் ஜெனீவா சமவாயங்களுக்கு உட்பட்டுப் போர் கைதிகள் என்ற சொல்லாடல் தான் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் மாறாக ஒரு உள்நாட்டில் நடைபெறக்கூடிய குற்றம் என்ற வகையில், அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கையாளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற ஒரு வருத்தமான செய்தியையும் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்றார்.

# அதிகரிக்கும் மரக்கறிகளின் விலைகள்



நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 1000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

இதனிடையே மழையின் தாக்கத்தால் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

எனினும் கெப்பெட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்குக் கொண்டு வரப்படும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஒன்லைன் வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞன் மரணம்

( முகம்மட் முக்தார் )

கையடக்கத்தொலைபேசி ஊடாக ஒன்லைன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இளைஞனொருவன் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளான்.இச்சம்பவம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் சாய்ந்தமருது - 11, உடையார் வீதியில் வசித்து வந்த முஹம்மட் நயீம் முஹம்மட் நப்லான் (வயது - 20 ) என்ற இளைஞனே தன் உயிரை மாய்த்துக் கொண்டவராவார்.

வியாபார செயற்பாட்டில் விரக்தியடைந்த நிலையில் ஒரு வகையான மாத்திரைகளை உட்கொண்டு சிகிச்சை பலனளிக்காமையின் காரணமாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (06) மாலை மரணமடைந்துள்ளார்.

குறித்த இளைஞனின் உடல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மரணமடைந்த இளைஞன் சவளக்கடை பொலிஸ் பிரிவில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் கணக்காளராக பணிபுரிந்து வந்ததுடன் குறித்த ஆலையில் அரிசியை வண்டு, பூச்சிகளிலிருந்து காப்பாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு வகையான மாத்திரைகளை உட்கொண்டுள்ளார். இவர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பக் கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. மரணமடைந்த இளைஞனின் தந்தை கூறுகையில் , தனது மகன் வெளிநாட்டில் தொழில் புரிவதற்காக முன்னாயத்தங்களை மேற்கொண்டதாகவும் அதற்காக அரிசி ஆலை ஒன்றில் கணக்காளராகச் சேர்ந்தார். இதற்கு மேலதிகமாக ஒன்லைன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்திருந்தார். இதில் இவர் நஷ்டமடைந்து பெருமளவு பணத்தை இழந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.





மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 வது நினைவுதினம் நேற்று முன்தினம் நேற்று (5) மாலை யாழ். கலைத் தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்துக்கு 2025 ஆண்டுக்குரிய நாட்குறிப்பேடு மற்றும் குறிப்பு புத்தகங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (5) அன்பளிப்புச் செய்யப்பட்டன. அல்-கித்மதுல் உம்மாஹ் நிறுவனத்தின் அனுசரணையில், ஊடகவியலாளர்கள், தங்கள் பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்காக இந்த பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

படம்: கிண்ணியா கியாஸ் ஷாபி

# குச்சவெளி முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்துரையாடல்

( எஸ். சினீஸ் கான் )

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குச்சவெளிப் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது தொடர்பான கலந்துரையாடல்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். தௌபீக் தலைமையில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

குச்சவெளிப் பிரதேச கட்சி ஆதரவாளர்கள் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எதிர்காலத்தில் கட்சியினால் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும், மக்களுக்கு எவ்வாறான விதத்தில் கிராம மட்டங்களில் தெளிவூட்டல்களை நடாத்த வேண்டும் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன .




# இந்தியாவிற்கு பரவியது சீனாவின் மெட்டாப்நியூமோ வைரஸ்

சீனாவில் சுவாச நோய்களின் அதிகரிப்புக்கு காரணமாக கண்டறியப்பட்ட மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (HMPV) தொற்று இந்தியாவில் திங்கட்கிழமை கண்டறியப்பட்டது.

அதன்படி, பெங்களூரில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில், எட்டு மாத ஆண் குழந்தைக்கு மனித மெட்டாப்நியூமோ வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதாக கர்நாடக மாநில சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கர்நாடகாவின் பெங்களூரில் உள்ள 2 குழந்தைகளுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. மூன்றாவது பாதிப்பு, அகமதாபாத்தை சேர்ந்தவருக்கு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெங்களூரைச் சேர்ந்த 8 மாத ஆண் குழந்தை மற்றும் 3 மாத பெண் குழந்தை என இரண்டு குழந்தைகளுக்கு தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. குழந்தைகளின் உடல்நிலையை கண்காணித்து



வருவதாக மத்திய அரசு தெரிவித்திருக்கும் நிலையில், இந்த HMPV வைரஸ் குழந்தைகளை பாதிக்கும் என்பதால் கர்நாடகா சுகாதாரத்துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாநில சுகாதாரத்துறை, சுயாதீனமாக நோயாளியான குழந்தையின் மாதிரிகளை பரிசோதிக்கவில்லை என்றாலும், தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகளின் நம்பகத்தன்மையை அவர்கள் ஒப்புக்கொண்டனர். எனினும், இதன் வகை என்ன என்பதை அவர்கள் உறுதிப்படுத்தவில்லை.

மனித மெட்டாப்நியூமோ வைரஸ், பொதுவாக 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் கண்டறியப்படுகிறது மற்றும் உலகளவில் 0.7 சதவீத காய்ச்சல் நோயாளிகளில் வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (HMPV) சமீபத்தில் சமூக ஊடகங்களில் பரவும் வீடியோக்கள் மற்றும் அறிக்கைகள் காரணமாக கவனத்தை ஈர்த்துள்ளது. அண்மைய நாட்களில் சீனாவில் உள்ள வைத்தியசாலைகளில் HMPV உட்பட சுவாச நோய்களின் அதிகரிப்பு அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

2001 ஆம் ஆண்டில் நெதர்லாந்தின் ஆராய்ச்சியாளர்களால் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட HMPV, கடுமையான சுவாச நோய்த்தொற்றுகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க காரணம் என்று அமெரிக்க நுரையீரல் சங்கம் தெரிவித்துள்ளது. இருமல் அல்லது தும்மலில் இருந்து வரும் சுவாசத் துளிகள் மூலமாகவோ அல்லது கதவு கைப்பிடிகள் அல்லது பொம்மைகள் போன்ற அசுத்தமான மேற்பரப்புகளைத் தொடுவதன் மூலமாகவோ, பாதிக்கப்பட்ட நபர்களுடனான நெருங்கிய தொடர்பு மூலமாகவோ வைரஸ் முதன்மையாக பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவில் அதிக வருமானம் பெற்று தரும் ரயில் சேவை



உலகின் நான்காவது மிகப் பெரிய ரயில்வே நெட்வேர்க்காக இந்திய ரயில்வே இருந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான ரயில்கள் நாட்டின் மூலை முடுக்குகளுக் கெல்லாம் சென்று பொது மக்களுக்கு சேவையாற்றுகின்றன. தற்போது இந்திய ரயில்வே புதிதாக வந்தே பாரத் ரயில்களை இயக்குவதற்கு ஆர்வம் காட்டி வருகிறது. நாள்தோறும் ரயில்கள் மூலம் சுமார் 2 கோடிக்கும் அதிகமானோர் பயணம் செய்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய ரயில்வேயில் ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ, வந்தே பாரத் உள்ளிட்ட ரயில்கள் அதிக பிரபலமாக உள்ளன. இதனை தவிர பேசஞ்சர் ரயில்கள், லோக்கல் மற்றும் மின்சார ரயில்கள் என்பன பொதுமக்களுக்கு சேவையாற்றுகின்றன.

ரயில்வே போக்குவரத்தில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் மூலமாக நல்ல வருமானம் கிடைக்கிறது. இருப்பினும் பெரும்பாலான வருமானம் பயணிகள் டிக்கெட்டுக்களையே சார்ந்துள்ளது. பொதுமக்களுக்கு சேவை அளிக்கும் விதமாக ஆண்டு தோறும் மானியத்துடன் ரயில்வே டிக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் பல சிறப்பு அம்சங்கள் இருந்தாலும் நீண்ட நெடிய ரயில்வே இணைப்புகள் உலக அளவில் இந்தியாவுக்கு பெரும் புகழை பெற்று தருகின்றன.

## தேசிய கீதம் அவமதிக்கப்பட்டதாக கூறி சட்டப்பேரவையை விட்டு வெளியேறிய ஆளுநர்



இந்த ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பித்த நிலையில், உரையை வாசிக்காமலேயே ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியேறினார். தேசிய கீதம் பாடப்படாததால், வெளியேறியதாக ஆளுநர் மாளிகை விளக்கமளித்துள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் இந்த ஆண்டின் முதல் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பித்தது. ஆண்டின் முதல் கூட்டத் தொடர் என்பதால், ஆளுநர் உரையுடன் அவை ஆரம்பிப்பதாக இருந்தது.

இதற்காக ஆளுநர் ஆர்.என். ரவி நேற்று காலை சட்டப்பேரவை வளாகத்திற்கு வந்தார். அவருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப் பட்டது. அதற்குப் பிறகு அவருக்கு பூங்கொத்து அளித்து சபாநாயகர் வரவேற்றார். ஆனால், அடுத்த சில நிமிடங்களிலேயே ஆளுநர் ஆர்.என்.ரவி அவையில் இருந்து வெளியேறினார்.

அடுத்த சில நிமிடங்களிலேயே ஆளுநர் மாளிகையின் எக்ஸ் பக்கத்தில் இது தொடர்பாக ஒரு பதிவு வெளியிடப்பட்டது. அந்தப் பதிவில், “தமிழக சட்டப்பேரவையில் இன்று மீண்டும் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டமும் தேசிய கீதமும் அவமதிக்கப்பட்டன. தேசிய கீதத்திற்கு மதிப்பளிப்பது நமது அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள முதல் அடிப்படைக் கடமைகளில் ஒன்று. மாண்புமிகு குடியரசுத் தலைவரின் உரையின் ஆரம்பத்திலும் முடிவிலும் நாடாளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக் கப்படுகிறது. இதேபோல் அனைத்து மாநில சட்டமன்றங்களிலும் ஆளுநர் உரையின் ஆரம்பத்திலும் முடிவிலும் தேசிய கீதம்பாடப்படுகிறது.” என தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் ‘இன்று ஆளுநர் சபைக்கு வந்தவுடன் தமிழ்த் தாய் வாழ்த்து மட்டும் பாடப்பட்டது. ஆளுநர் அரசியலமைப்புச் சட்டக் கடமையை அவைக்கு நினைவூட்டியதோடு, பேரவைத் தலைவரையும் முதலமைச்சரையும் தேசிய கீதம் பாடுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அவர்கள் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். இது மிகவும் கவலை அளிக்கும் விடயம். அரசியலமைப்புச் சட்டத்தையும் தேசிய கீதத்தையும் அவமதிக்கும் இத்தகைய அப்பட்டமான நடவடிக் கைக்கு உடந்தையாக இருக்கக் கூடாது என்பதற்காக ஆளுநர் மிகுந்த வேதனையுடன் அவையை விட்டு வெளியேறினார்” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு சில நிமிடங்களிலேயே அந்தப் பதிவு நீக்கப்பட்டு புதிதாக ஒரு பதிவு முந்தைய பதிவில் இருந்த “மாண்புமிகு குடியரசுத் தலைவரின் உரையின் ஆரம்பத்திலும் முடிவிலும் நாடாளுமன்றத்தில் தேசிய கீதம் பாடப்படுகிறது அல்லது இசைக்கப்படுகிறது” என்ற வரிகள் இந்தப் பதிவில் நீக்கப்பட்டு ஆளுநர் மாளிகையால் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குஜராத்தில் ஹெலிகொப்டர் விபத்து; மூவர் பலி

குஜராத் மாநிலம் போர்பந்தர் விமான நிலையத்தில் ஞாயிற்றுக் கிழமை(05) விபத்து ஒன்று ஏற்பட்டது. வழக்கமான பயிற்சியின் போது கடலோர காவல்படைக்கு சொந்தமான இலகுரக துருவ் ஹெலிகொப்டர் திடீரென்று கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது.

இந்த விபத்தில், ஹெலிக் கொப்டரில் பயணித்த 2 விமானிகள் உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் திடீரென ஹெலிக் கொப்டர் விபத்துக்குள்ளானதை அறிந்ததும், தீயணைப்பு வீரர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

அதேபோல், இந்திய கடலோர காவல்படை விபத்துடன் தொடர்புடைய தகவல்களை உறுதிப்படுத்தியது. இந்திய கடலோர காவல்படைக்கு சொந்தமான இலகுரக துருவ் ஹெலிக்கொப்டர், குஜராத்தின் போர்பந்தரில் பயிற்சி பணியின் போது விபத்தில் சிக்கியது. இதில் 3 பேர் பலியாகினர் என்று கடலோர காவல்படை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுக்கு இந்தியா கண்டனம்




அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் கண்டனத்திற்குரியது. உள்நாட்டு தோல்விகளுக்கு அண்டை நாடுகளை குறை கூறுவது பாகிஸ்தானின் பழைய வழக்கம் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் கடந்த மாதம் இறுதியில் தாக்குதல் நடத்தியது. இதில் 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானோர் அப்பாவி பொது மக்கள் ஆவார்கள். இது தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விற்கு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் “அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் கண்டனத் திற்குரியது. உள்நாட்டு தோல்விகளுக்கு அண்டை நாடுகளை குறை கூறுவது பாகிஸ்தானின் பழைய வழக்கம்” எனத் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி பாகிஸ்தான் போர் விமானம் ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணமான பக்திகா மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. இதில் 46 பேர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் பெண்களாவர். பாகிஸ்தான் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்போம் என ஆப்கானிஸ்தான் கூறிய நிலையில், பாகிஸ்தானில் உள்ள பகுதிகள் மீது தாக்குதலும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## சத்தீஸ்கரில் 9 பேர் வீரமரணம்



சத்தீஸ்கர் மாநிலம் பீஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்பு படையினர் சென்ற வாகனம் மீது நக்சல்கள் தாக்குதல் நடத்தியதில் படைவீரர்கள் உட்பட 9 பேர் வீர மரணம் அடைந்தனர்.

முதற்கட்ட தகவலின்படி, சத்தீஸ்கர் மாநிலம் பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியான குத்ருவில் பருதிக்குச் செல்லும் போது ஐ.இ.டி., குண்டுவெடிப்பு மூலம் நக்சல்களால் பாதுகாப்பு படையினர் வாகனம் தகர்க்கப் பட்டதாக தெரியவந்துள்ளது. பலியானவர்கள் எட்டு பேர் தண்டேவாடா டிஆர்ஜி ஜவான்கள் மற்றும் ஒரு சாரதி உட்பட 9 பேர் என தெரியவந்துள்ளது. தண்டேவாடா, நாராயண்பூர் மற்றும் பிஜாப்பூர் மாவட்டங்களில் பாதுகாப்பு படையினர் கூட்டு நடவடிக்கை ரோந்து சென்றுவிட்டு வரும் போது இந்தசம்பவம் நடைபெற்றுள்ளது. குத்ரு பெத்ரே வீதியில் வெடிகுண்டினைப் பயன்படுத்தி மாவோயிஸ்டுகள் பொலிஸ் வாகனத்தை வெடிக்கச் செய்தனர். இந்த ஆண்டின் முதல் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையை சனிக்கிழமையன்று அபுஜ்மத் நகரில் நடத்திவிட்டுச் செல்லும்போது இந்த சம்பவம் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இந் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டதுடன் தாக்குதல் நடத்திய மாவோயிஸ்டுகளை தேடும்பணி முழுவீச்சில் நடைபெறுவதாக பஸ்தார் மண்டல ஐஜி சுந்தர் ராஜ் தெரிவித்தார்.

## அதிக வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக சோழிங்கநல்லூர்



சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழகத்தில் அதிக வாக்காளர்களை கொண்டுள்ளதாக இந்திய தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய தேர்தல் திணைக்களத்தின் உத்தரவின்படி, கடந்த ஒக்டோபர் மாதம் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி ஆரம்பித்தது. அதன்படி 2024ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20ஆம் திகதி முதல் ஒக்டோபர் 18ஆம் திகதி வரை, வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல், புகைப்பட அடையாள அட்டைகளில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல் மற்றும் தரமான புகைப்படங்களை இணைத்தல் போன்ற பணிகள் இந்திய தேர்தல் திணைக்களத்தின் கீழ் செய்யப்பட்டன. அதன் பிறகு ஒக்டோபர் 29ஆம் திகதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அன்று முதல் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கான விண்ணப்பங்கள் நவம்பர் 28ஆம் திகதி வரை பெறப்பட்டது. அதன் பின்னர் திருத்தங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு நவம்பர் 29ஆம் திகதி முதல் கடந்த 24ஆம் திகதி வரை பரிசீலனை நடைபெற்றது. இந்த நிலையில் தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

அதன்படி தமிழகத்தில் 6 கோடியே 36 இலட்சத்து 12 ஆயிரத்து 950 வாக்காளர்கள் இருக்கின்றனர். 3 கோடியே 11 இலட்சத்து 74 ஆயிரத்து 27 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 24 இலட்சத்து 29 ஆயிரத்து 803 பெண் வாக்காளர்களும், 9 ஆயிரத்து 120 ஏனைய பாலின வாக்காளர்களும் இருக்கின்றனர்.

இறுதி வாக்காளர் பட்டியலின்படி செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழகத்தில் அதிக வாக்காளர்களை கொண்டுள்ளதாக கணக்கிடப்பட்டது. இத்தொகுதியில் மொத்தம் 6 இலட்சத்து 90 ஆயிரத்து 958 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண் வாக்காளர்கள் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 184 பேர், பெண் வாக்காளர்கள் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 645 பேர். மேலும், ஏனைய பாலினத்தவர்கள் 291 பேர் என தேர்தல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

# யூனுக்கு எதிரான பிடியாணையை நிறைவேற்றுமாறு கோரிக்கை

பதவி நீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் மீதான குற்றவியல் விசாரணைக்கு தலைமை தாங்கும் புலனாய்வு அமைப்பு, ஜனாதிபதியின் கைது தொடர்பான விடயங்களை பொறுப்பேற்குமாறு அந் நாட்டு பொலிஸாரிடம் திங்கட்கிழமை (06) கேட்டுக் கொண்டது.

யூன் சுக் யோலுக்கு எதிரான பிடியாணை உத்தரவினை நிறைவேற்றும் புலனாய்வாளர்களின் முயற்சியை தடுக்க, மனிதச் சங்கிலியை உருவாக்கிய ஜனாதிபதி காவலர்களுடன் வெள்ளிக்கிழமை (03) ஏற்பட்ட பதட்டமான நிலையினை அடுத்து இந்த கோரிக்கை வந்துள்ளது.

உயர்மட்ட அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகத்தின் (CIO) கூட்டுப் புலனாய்வாளர் குழு மற்றும் காவல்துறை, யூன் தனது குறுகிய கால இராணுவச் சட்டத்தை திணித்ததன் மூலம் கிளர்ச்சிக்கு மையமாகச் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டுகளை விசாரித்து வருகின்றனர். உயர்மட்ட அதிகாரிகளுக்கான ஊழல் புலனாய்வு அலுவலகம், ஞாயிற்றுக்கிழமை (05) தேசிய பொலிஸ் முகவர் நிலையத்தின் துணை நிறுவனமான தேசிய புலனாய்வு அலுவலகத்திற்கு உத்தியோகபூர்வ கடிதம் மூலம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.



அதிகார துஷ்பிரயோகம் மற்றும் கிளர்ச்சி குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் ஜனாதிபதி தொடர்பான விசாரணைக் கடமைகளை அலுவலகம் கைவிடாது என்றும் அக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டது. அத்துடன், திங்கட்கிழமை (06) நள்ளிரவுடன் காலாவதியான யூனுக்கு எதிரான பிடியாணை உத்தரவினை நீடிக்குமாறு நீதிமன்றத்தில் கோருவதாகவும் CIO தெரிவித்துள்ளது. இதனிடையே, கைது பணிகளை மேற்கொள்வதற்கான கோரிக்கையை CIO ஒருதலைப்பட்சமாக பொலிஸ் தலையீடு இல்லாமல் செய்ததாகவும், அது தொடர்பில் சட்டப்பூர்வ மறு ஆய்வு நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், ஜனாதிபதி பாதுகாப்பு சேவையுடனான பல மணி நேர முற்றுகைக்குப் பின்னர் அவர்கள் வெளியேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹிலாரி, சோரஸ், டென்சிலுக்கு அமெரிக்காவின் உயரிய விருது



அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், தொழிலதிபர் ஜோர்ஜ் சோரஸ், ஹொலிவுட் நடிகர் டென்சில் வொஷிங்டன் உட்பட 19 பேருக்கு அந்நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டது. கலை, பொதுச் சேவை, அறிவியல் மற்றும் பிற துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு அமெரிக்காவில் 'ஜனாதிபதி சுதந்திர பதக்கம்' வழங்கப்படுகிறது. அமெரிக்க அரசின் மிக உயரிய விருதாக கருதப்படும் இந்தப் பதக்கத்தை ஜனாதிபதி வழங்குவார்.

இந்நிலையில், தலைநகர் வொஷிங்டனில் அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், ஜனநாயக கட்சி ஆதரவாளரான தொழிலதிபர் ஜோர்ஜ் சோரஸ், ஹொலிவுட் நடிகரும் இயக்குநருமான டென்சில் வொக்ஷிங்டன் உட்பட 19 பேருக்கு அந்தப் பதக்கத்தை ஜனாதிபதி ஜோ பைடன் சனிக்கிழமை வழங்கினார். கால்பந்தாட்ட நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸிக்கும் இந்தப் பதக்கம் அறிவிக்கப்பட்டது.

ஆனால், நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான திட்டமிடலில் ஏற்பட்ட சிக்கலால், அவரால் நேரில் பதக்கத்தைப் பெற முடியவில்லை. இந்தப் பதக்கங்களை கடைசி முறையாக ஜனாதிபதி ஜோ பைடன் வழங்கியுள்ளார். வரும் ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு 20 பில். டொலர் கடன்

## உலக வங்கி முடிவு

பாகிஸ்தானுக்கு 20 பில்லியன் டொலர் கடன் வழங்க உலக வங்கி விரைவில் ஒப்புதல் அளிக்கவுள்ளது.

நிலையற்ற அரசியல் சூழல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானுக்கு 6 பிரிவுகளின்கீழ் 10 ஆண்டு காலத்துக்கு இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

'பாகிஸ்தானுடனான ஒப்பந்த நடைமுறை 2025-2035' என்ற தலைப்பிடப்பட்ட இந்த முன்னெடுப்பின்கீழ் குழந்தைகளின் வளர்ச்சிக் குறைபாட்டை குறைப்பது, வறுமை ஒழிப்பு நிதியை அதிகரித்து தனியார் முதலீட்டை ஊக்குவிப்பது போன்ற துறைகளில் கவனம் செலுத்தப்படவுள்ளது. 2025-2035 காலகட்டத்தில் பாகிஸ்தானில் மூன்று பொதுத் தேர்தல்கள் நடைபெற வாய்ப்புள்ளது. இருப்பினும், இந்த முன்னெடுப்புக்கு கட்சிப் பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிப்பதால், அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தாலும் இதை அமுல்படுத்துவதில் எவ்வித சிக்கலும் ஏற்படாது எனவும் இந்த முன்னெடுப்புக்கு ஜனவரி 14ஆம் திகதி உலக வங்கி ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிழக்கு கடல் பகுதியில் வடகொரியா ஏவுகணை பரிசோதனை

உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

இந்த நிலையில் வட கொரியா நேற்று கிழக்கு கடல் பகுதியில் ஏவுகணையை செலுத்தியது. கொரிய தீபகற்பம் மற்றும் ஜப்பானுக்கு இடையே உள்ள நீரில் இறங்குவதற்கு



முன் 1,100 கிலோமீட்டர் (685 மைல்) தூரம் ஏவுகணை பறந்ததாகவும் தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. வட கொரிய தலைநகரான பியாங்யாங்கிற்கு அருகில் உள்ள பகுதியில் இருந்து ஏவுகணை ஏவப்பட்டதாகவும், அமெரிக்கா மற்றும் தென் கொரிய இராணுவத்தினரால் ஏவுகணை ஏற்பாடுகள் முன்கூட்டியே கண்டறியப்பட்டதாகவும் தெற்கின் கூட்டுப் படைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

# காட்டில் 5 நாட்களாக உயிர்பிழைத்த சிறுவன்



ஐந்து நாட்களுக்கு பிறகு சுமார் 30 மைல்கள் (50 கி.மீ) தொலைவில் உள்ள வனப்பகுதியில் சிறுவன் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டான். வறட்சியின்போது தனது கிராமத்தில் கற்றுக்கொடுத்த யுக்திகளை பயன்படுத்தி சிறுவன் உயிர்பிழைத்துள்ளான்.

சிம்பாபே நாட்டின் வடக்குப் பகுதியை சேர்ந்த எட்டு வயது சிறுவன், சிங்கங்கள், யானைகள் மற்றும் பிற ஆபத்தான வனவிலங்குகளின் இருப்பிடமான மட்டுசடோனா தேசிய பூங்காவின் ஆபத்தான வனப்பகுதியில் ஐந்து நாட்கள் உயிர் பிழைத்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ரினோடெண்டா பூண்டு [Tinotenda Pundu] என்ற அந்த சிறுவன் டிசம்பர் 27 அன்று வடக்கு சிம்பாபேயில் உள்ள தனது கிராமத்திற்கு அருகே சுற்றித் திரிந்துகொண்டிருந்தபோது காணாமல் போனான். 5 நாட்களுக்கு பிறகு சுமார் 30 மைல்கள் (50 கிமீ) தொலைவில் உள்ள வனப்பகுதியில் சிறுவன் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டான். நீரிழப்பினால் பலவீனமான நிலையில் சிறுவன் மீட்கப்பட்டான். சிறுவன் ஒரு ஆற்றங்கரையில் குச்சிகளைப் பயன்படுத்தி தண்ணீரைத் தோண்டி, ட்ஸ்வான்ஸ்வா என்ற காட்டுப் பழத்தை உண்டு வாழ்ந்துள்ளான். சிறுவன் அலைந்து திரிந்து , திசை தவறி, ஆபத்தான மட்டுசடோன்ஹா பூங்காவிற்குத் தெரியாமல் சென்றுள்ளான். ஹாக்வேக்கு அருகிலுள்ள காட்டில் 5 நீண்ட, கொடூரமான நாட்களுக்குப் பிறகு. உமே நதியின் துணை நதி அருகே சிறுவனை உயிருடன் கண்டுபிடித்தனர்.

வீட்டிலிருந்து 23 கி.மீ தூரம் அலைந்து திரிந்து, கர்ஜனை செய்யும் சிங்கங்கள், யானைகளைக் கடந்து செல்வது, காட்டுப் பழங்களை உண்பது மற்றும் ஆபத்தான காட்டுப் பகுதிகளுக்கு மத்தியில் உறங்குவது, 8 வயது சிறுவனுக்கு மிகவும் கடினமாக இருந்திருக்கும் எனவும் மட்டுசடோனா பூங்காவில் சுமார் 40 சிங்கங்கள் உள்ளன. துணிச்சலான பூங்காவின் சுற்றுலாப் பிரயாணிகளும், நியாமினியாமி சமூகத்தை சேர்ந்தவர்களும், ஒவ்வொரு நாளும் சிறுவன் கேட்கும்படி டிரம்ஸ் அடித்து தேடி கடைசியில் கண்டுபிடிக்க உதவியுள்ளார்கள் என உள்ளூர் அமைச்சர் முட்சா முரோம்பெட்ஸி தெரிவித்தார்.

# உலக வலம்

பா.கிருஷிகா

## ஒரு தசாப்தத்தின் பின்

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு

அமெரிக்கா, கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஒரு கடுமையான பனிப்புயலை எதிர்கொள்ள தயாராகி வருகிறது. 2011ஆம் ஆண்டுக்கு பிறகு, மிக மோசமான பனிப்பொழிவு மற்றும் குளிரான வெப்பநிலை நிலவக்கூடும் என்பதால், அமெரிக்காவின் 30 மாகாணங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கென்டக்கி, வேர்ஜீனியா, கன்சாஸ், ஆர்கன்சாஸ் மற்றும் மிசோரி ஆகிய மாகாணங்களில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் நிலைமைகள் ஏற்கனவே மோசமடைந்துள்ளன, பனிப்பொழிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக சில விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன. மிசிசிப்பி மற்றும் புளோரிடா போன்ற கடுமையான குளிரை இதுவரை எதிர்கொள்ளாத அமெரிக்காவின் சில பகுதிகளில் கூட, வானிலை மோசமாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புயல் கிழக்கு நோக்கி நகரும்போது, இன்னும் மிகக்குறைந்த வெப்பநிலையை அமெரிக்கர்கள் எதிர்கொள்வார்கள் என்று வானிலை முன்னறிவிப்பாளர்கள் தெரிவித்தனர். ஆர்க்டிக் பகுதியைச் சுற்றி வரும் குளிர்ந்த காற்றின் ஒரு பகுதியான துருவச் சுழல் (Polar Vertex) காரணமாக இந்த தீவிர வானிலை ஏற்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வோஷிங்டன் டி.சி-இல் 5 முதல் 9 அங்குலம் வரையிலான பனிப்பொழிவு காணப்படுகின்றது.





அமெரிக்காவின் மத்திய பகுதியில் ஆரம்பித்த இந்த புயல் அடுத்த ஓரிரு நாட்களில் கிழக்கு நோக்கி நகரும் என்று தேசிய வானிலை சேவை (NWS) தெரிவித்துள்ளது. 2011ஆம் ஆண்டுக்குப் பிறகு, மிகவும் குளிரான ஒரு ஜனவரி மாதத்தை அமெரிக்கா எதிர்கொள்ள இது வழிவகுக்கும் மேலும் மிகவும் குறைவான வெப்பநிலை, ஒரு வாரத்திற்கு நீடிக்கக்கூடும் என "அக்யூவெதர்" முன்னறிவிப்பாளர் டான் டிபோட்வின் தெரிவித்தார்.

# போர்க்களத்தில் ஏஐ ரோபோக்களால் மனிதர்களை போல செயற்பட முடியாது

ஏஐ தொழில்நுட்ப மனித வடிவிலான ரோபோ தயாரிப்பில் முன்னனியில் உள்ள சீனா, போர்க்களத்தில் ஏஐ ரோபோக்களால் மனிதர்களை போல செயற்பட முடியாது என தெரிவித்துள்ள கருத்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. மனிதர்களை போன்று ஏஐ ரோபோவால் போர்களத்தில் செயல்பட முடியாது என சீன இராணுவம் தெரிவித்துள்ளது. ஏஐ தொழில்நுட்பம் மனிதர்களுக்கு உதவும் கருவியாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும், மனிதர்களுக்கு மாற்றாக இருக்கக் கூடாது எனவும் சீன இராணுவ நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. போர்க்களத்தில் மனிதர்களால் மட்டுமே சூழலுக்கு ஏற்ப முடிவுகளை எடுக்க முடியும் என்றும், ஏஐ ரோபோவால்



கொடுக்கப்பட்ட கட்டளைக்கு ஏற்ப மட்டுமே செயலாற்ற முடியும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீன இராணுவ ஆராய்ச்சிக்குழு ஏஐ தொழில்நுட்பத்துடன் இயங்கும் இராணுவ தளபாடங்களை தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வரும் சூழலில், இந்த கருத்து வெளியாகி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்ய தீர்மானம்

கனடா நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, லிபரல் கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை தி குளோப் மற்றும் மெயில் தங்களுக்கு கிடைத்த தகவல்களில் ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்ய இருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளன.



அதில், எங்களிடம் தெரிவித்தபடி ஜஸ்டின் ட்ரூடோ எப்போது இராஜினாமா பற்றி அறிவிப்பார் என்பது பற்றி தங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது, ஆனால் புதன்கிழமை நடைபெற இருக்கும் செயற்குழு கூட்டத்திற்கு முன்பு அது நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த தகவல் பற்றிய கேள்விக்கு கனடா பிரதமர் அலுவலகம் உடனடி பதில் அளிக்கவில்லை. ட்ரூடோ உடனடியாக வெளியேறுவாரா அல்லது புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பிரதமராக நீடிப்பாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. 2013 ஆம் ஆண்டு லிபரல் கட்சியின் தலைவராக ட்ரூடோ பொறுப்பேற்றார். கட்சி ஆழ்ந்த சிக்கலில் இருந்தபோது முதல் முறையாக ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. ட்ரூடோவின் விலகல், ஒக்டோபரின் பிற்பகுதியில் நடைபெற இருக்கும் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியிடம் லிபரல் கட்சி மோசமான தோல்வியை சந்திக்கும் என்று கருத்துக் கணிப்புகள் வெளியாகி உள்ள நிலையில், லிபரல் கட்சிக்கு நிரந்தர தலைவர் இல்லாமல் போகும் வாய்ப்பு உருவாகி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கவாஸ்கர் அழைக்கப்படாத போர்டர் கவாஸ்கர் கிண்ணம்





போர்டர் – கவாஸ்கர் கிண்ணத்தை வழங்க கவாஸ்கர் அழைக்கப்படாதது குறித்து கிரிக்கெட் அவுஸ்திரேலியா விளக்கம் அளித்துள்ளது.

அவுஸ்திரேலியா வென்றால் அலன் போர்டரும் இந்தியா வென்றால் கவாஸ்கரும் வழங்குவதாக ஏற்கனவே கிரிக்கெட் அவுஸ்திரேலியா முடிவெடுத்ததால் கவாஸ்கர் அழைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் ஊடக செய்தியாளர், “ஆம் ஒப்புக்கொள்கிறோம். கிண்ணத்தை வழங்க இருவரும் இருந்திருந்தால் நன்றாக இருக்கும்” எனக் கூறியுள்ளார்.

### சுனில் கவாஸ்கர் (கவாஸ்கர்) கூறியதாவது:

போர்டர் – கவாஸ்கர் கிண்ணத்தை வென்ற வெற்றியாளருக்கு கிண்ணத்தை வழங்குமிடத்தில் இருப்பதைக் கண்டிப்பாக விரும்பியிருப்பேன். எல்லா விடயங்களையும் கடந்து, இது போர்டர்– கவாஸ்கர் டெஸ்ட் தொடர். இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் விளையாடுகின்றன.

நான் மைதானத்தில்தான் இருந்தேன். அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதால், நான் கிண்ணத்தை வழங்க விரும்பமாட்டேன் என்றெல்லாம் கிடையாது. அவர்கள் நன்றாக விளையாடியதால், வெற்றி பெற்றார்கள். இந்தியராக இருப்பதால், அலன் போர்டருடன் இணைந்து கிண்ணத்தை வழங்கியிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன் என்றார்.



# இந்திய சுழற் பந்து வீச்சாளர் விவாகரத்து



இந்திய கிரிக்கெட் அணியில் சுழற் பந்துவீச்சாளராக இருந்த யுஸ்வேந்திர சாஹல் தனது மனைவி தனஶ்ரீ வர்மாவை விவாகரத்து செய்யப் போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அவர் பல்வேறு ஆண்களுடன் நெருக்கமாகப் புகைப்படம் எடுத்து அதைத் தனது சமூக வலைத்தள பக்கங்களில் வெளியிட்டு இருந்ததைச் சுட்டிக்காட்டி இதுபோன்ற நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதால் தான் மனைவியை விவாகரத்து செய்வதாகக் காரணத்தைச் சுட்டிக்காட்டி உள்ளார். சாஹல் இந்திய அணியில் சிறப்பாக விளையாடி வந்த நேரத்தில் தனஶ்ரீ வர்மாவை திருமணம் செய்து கொண்டார்.

அப்போது தனஸ்ரீ வர்மா நடன கலைஞராக இருந்தார். அவருக்கு சமூக வலைத்தளங்களில் இலட்சக்கணக்கான ரசிகர்களும் இருந்தனர். ஆனால், தனஶ்ரீ வர்மா திருமணத்துக்குப் பின்னரும் தனது நடன வீடியோக்களை வெளியிட்டு வந்துள்ளார்.

# பாபர் அசாம் ஷான் மசூத் 147 ஆண்டுக் கால டெஸ்ட் வரலாற்றில் மாபெரும் சாதனை





தென் ஆபிரிக்கா – பாகிஸ்தான் இடையிலான 2-ஆவது மற்றும் கடைசி டெஸ்டில் பாலோ ஆன், ஆன நிலையில் தொடர்ந்து 2-ஆவது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப ஆட்டக்காரர்களாக ஷான் மசூத் மற்றும் பாபர் அசாம் களமிறங்கினர். இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 205 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக எடுத்தனர்.

இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் “பாலோ ஆன்“ ஆன பிறகு முதல் விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் எடுத்த ஆரம்ப ஜோடி என்ற மாபெரும் சாதனையை பாபர் அசாம் – ஷான் மசூத் படைத்துள்ளனர்.

1. பாபர் அசாம் – ஷான் மசூத் – 205
2. கிரெம் சுமித் – நீல் மெக்கன்சி – 204
3. தமிம் இக்பால் – இம்ருல் கயஸ் – 185
4. மார்கஸ் ட்ரெஸ்கோதிக் – மைக்கேல் வாகன் – 182
5. கிரஹாம் கூச் – மைக்கேல் அதர்டன் – 176

இந்த போட்டியின் 3-ஆவது நாள் முடிவில் பாகிஸ்தான் 1 விக்கெட்டை இழந்து 213 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஷான் மசூத் 102 ஓட்டங்களுடனும், பாபர் அசாம் 81 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

# தியகம விளையாட்டரங்கின் குறைபாடுகள் ஆராய்வு

## அமைச்சர் நேரடி விஜயம்



தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே அண்மையில் விஜயம் செய்தார்.

அவ் விஜயத்தில் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன ஆகியோர் மைதான வளாகத்தைச் சுற்றி பார்த்ததுடன், நிலைமையை அவதானித்த அமைச்சர், மைதானத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

# இலங்கை சுற்றுப் பயணத்தில் கப்டன் கமின்ஸ் விலகல், கப்டனாக ஸ்டீவன் ஸ்மித்





அவுஸ்திரேலிய அணியின் இலங்கை சுற்றுப் பயணத்தில் கப்டன் பெட் கமின்ஸ் பங்கு பற்றுவதில் சந்தேகம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு டிம் பெய்னிடம் இருந்து அணியைப் பொறுப்பேற்ற பின்னர், குடும்பத்தை முதன்மைப்படுத்தி, தனது முதல் முழு சுற்றுப் பயணத்தைத் தவிர்க்கக் கூடும் என தெரிவித்த பெட் கமின்ஸ், கப்டன் பதவியில் தொடர்வதாகவும் கூறியுள் ளார்.

தனது இரண்டாவது குழந்தையின் பிரசவிப்புக்காகக் காத்திருக்கும் நிலையில் இலங்கையில் விளையாடுவதால் சந்தேகம் என்று ஒப்புக்கொண்டுள்ளார். ஸ்டீவன் ஸ்மித் அவருக்குப் பதிலாக கப்டனாக செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை சைக்கிளோட்டச் சம்மேளன உள்ளக முரண்பாடுகளுக்கு விரைவில் தீர்வு



இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தின் உள்ளக வெட்டுக் குத்துகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு பிரச்சினைகளுக்கு அமைச்சு மட்டத்தில் தீர்வு பெற்றுக் கொடுப்பதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார் கமகே தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார் கமகே மற்றும் இலங்கை சைக்கிள் ஓட்ட சம்மேளனத்துக்கும் இடையிலான கலந்துரையாடல் அண்மையில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் டங்கன் வயிட் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இக்கலந்துரையாடலில் இளைஞர் விவகார பிரதியமைச்சர் எரங்க குணசேகர, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் அருண பண்டார உட்பட விளையாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டதுடன், சைக்கிள் ஓட்ட சம்மேளனத்துடன் இணைக்கப்பட்டுள்ள 66 சங்கங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் இணைந்து கொண்டனர். இலங்கை சைக்கிள் ஓட்ட சம்மேளன உறுப்பினர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட வேண்டுமெனவும், அதன் பின்னர் சைக்கிள் ஓட்ட சம்மேளன புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவை நடத்த முடியும் என இதன் போது அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடிகளால் விளையாட்டைச் சீர்குலைப்பதை அனுமதிக்க முடியாது. கடந்த காலங்கள் சம்மேளனத்தின் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதில் செலவிடப்பட்டதால், மேலும் சங்கங்களுக்குள் உள்ள அதிகார மோதல்கள் விளையாட்டுக்குத் தடைகளை ஏற்படுத்தும். ஆதலால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 07 ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.